Appropriate Technology Services
121, POINT ... ROAD
NALLUR, JAFFNA.
No.........

# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

RECEIVED
15 AUG 1961
CEYLON

மலர் : 13 இதழ் : 6 மே, 1961 விலை : சதம் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப் படம்



இஸ்ருமுனி விகாரை மிகவும் பழைய பௌத்த விகாரையென்பது யாவரும் நன்கறிந்த தொன்று. இது புனித அநுராதபுர நகரத்திலுள்ளது. இதில் 500 செல்வர் தம் செல்வத்தைத் துறந்து பௌத்த குருமாராகி வாழ்ந்த விகாரையாதலின் இது இஸ்ருமுனி விகாரை எனப் பெயர் பெறலாயிற்று. இஸ்ரு என்பது செல்வம் எனப் பொருள் படும். இதனையடுத்து பெரிய ஆராமம் ஒன்றுளது. இஸ்ருமுனிவிகாரையில் கல்லின் மீது காதலர் உருவம் புடைச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இது குப்தகாலச் சிற்பம் எனச் சரித்திர ஆராய்ச்சி அறிஞர் திரு. எச். டபிள்யு. கொட்றிங்ரன் குறிப்பிட்டுள்ளார். காதலர் இருவரின் மனமொருமித்து மகிழ்வுறும் நிகழ்ச்சியைப் பிரதிபலிக்கும் உயிர்ச்சித்திரம் போன்ற ஓர் சோடிச் சிற்பம் எமது அட்டைப்படத்தை அலங்கரிக்கிறது.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ் பேசும் பிள்ளைகளுக்குக் கல்வி போதித்தல் .. .. | 3 |
| 2. | முத்துக்குளிப்பும் முத்து வளர்ப்பும் .. .. .. | 4 |
| 3. | தாகூர் அஞ்சலி .. .. .. | 8 |
| 4. | அண்மையில் கண்டெடுக்கப்பட்ட இந்து விக்கிரகங்கள் .. .. | 9 |
| 5. | கவிஞர் மகாலிங்கசிவம் .. .. .. | 22 |
| 6. | இரவீந்திரநாத் தாகூர் .. .. .. | 26 |


ஜே. என். ஆர் 17416—5,608 (6/61)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 186



# தமிழ் பேசும் பிள்ளைகளுக்குக் கல்வி போதித்தல்

இலங்கையிலுள்ள தமிழ்க்குழந்தை ஒவ்வொன்றும் இன்று பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக் கழகம் வரை தன் தாய் மொழியிலேயே கல்விகற்கக் கூடியதாக இருக்கின்றது.

பல்கலைக் கழக தரத்தை அடைந்ததும் அதற்கு தமிழ் மொழியிலேயே எந்தப்பாடத்திலும் பட்டம் பெறுதற்கு அம்மொழியிலேயே கற்கும் உரிமையுண்டு. அவ்வாறு கல்விகற்ற ஒருவர் அரசாங்க சேவையில் உத்தியோகம் பெறுதற்கு எந்தப் பரீட்சைக்கும் அம்மொழியிலேயே தோற்றலாம்.

தமிழ் மொழியின் நியாயமான அளவு உபயோகத்துக்கு வசதியளிக்கும் தமிழ் மொழி (விசேஷ ஏற்பாடுகள்)ச் சட்டத்தில் இவ்வேற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன.

**எனவே, ஒரு தமிழ்ப் பிள்ளைக்குத் தன் தாய் மொழியில் கல்வி பெற வசதிகள் இல்லை என்று கூறுதல் தவறாகும்.**

சிங்களக் குழந்தை ஒன்றுக்கு சிங்கள மொழியில் கல்வி பெறுதற்குள்ள அதே உரிமை தமிழ்க் குழந்தை ஒன்றுக்குத் தமிழ் மொழியில் கல்வி பெற உண்டு என்பது தமிழ்மொழி (விசேஷ ஏற்பாடுகள்)ச் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே நிலைமைதான் இன்று எமது பாடசாலைகளில் இருந்து வருகிறது.

**தமிழ்ப் பிள்ளை ஒன்றுக்கு தனது தாய்மொழியில் கல்வி பெற இன்று என்னென்ன வசதிகள் உண்டு?**

22,35,002 மாணவ மாணவிகளைக் கொண்ட மொத்தம் 8,069 பாடசாலைகள் இன்று இலங்கையில் இருக்கின்றன என்பதைச் சமீபத்தில் கல்விப் பகுதியால் தயாரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இப்பாடசாலைகளுள் 1,192 பாடசாலைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருக்கின்றன. ஏறக்குறைய 2,53,878 பிள்ளைகள் இப்பாடசாலைகளுக்குச் சென்று தமிழ் மொழியில் கல்வி கற்று வருகின்றனர்.


மாணவ, மாணவிகளின் மொத்த எண்ணிக்கையில் 12·1 சத வீதமானவர்கள் மட்டுமே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்த போதிலும் இலங்கையிலுள்ள பாடசாலைகளில் 14·8 சதவீதமான பாடசாலைகள் இவ்விரு மாகாணங்களிலும் இருக்கின்றன என்பதை இது காட்டுகின்றது. மேலும் 68,050 இலங்கைத் தமிழ்ப் பிள்ளைகளும் 1,01,932 இந்தியத் தமிழ்ப் பிள்ளைகளும் இலங்கையின் இதர பிரதேசங்களிலுள்ள ஏனைய பாடசாலைகளுக்குச் சென்று கல்வி பயின்று வருகின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள இந்த மாணவ, மாணவிகளுக்குக் கல்வி போதிக்க 9,468 ஆசிரியர்களும் ஆசிரியைகளும் இருக்கிறார்கள். இவர்களில் 229 பேர் அல்லது 2·4 சதவீதமானவர்கள் பயிற்சி பெற்ற பட்டதாரிகள்; 802 பேர் அல்லது 8·5 சத வீதமானவர்கள் பட்டதாரிகள்; 4,623 பேர் அல்லது 48·8 சத வீதமானவர்கள் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள்; 1,372 பேர் அல்லது 14·5 சதவீதமானவர்கள் தராதரம் பெற்ற ஆசிரியர்கள்.

இப்போது இந்தப் புள்ளிவிவரங்களை இலங்கையின் மற்றப் பிரதேசங்களின் புள்ளி விவரங்களுடன் ஒப்பிட்டுப்பார்ப்போம். மற்றைய ஏழு மாகாணங்களிலும் 71,641 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 513 பேர் அல்லது ·7 விகிதத்தினர் பயிற்சி

(7 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிப்பிகளை இயந்திரமூலம் வாரியெடுத்தல்

# முத்துக் குளிப்பும் முத்து வளர்ப்பும்

திரு. எஸ். சிவலிங்கம்
(மீன்பிடித் திணைக்கள ஆராய்ச்சியாளர்)

இலங்கை முத்துக்கள் ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு மேல் பிரக்கியாதி பெற்று விளங்குகின்றன. கடற்கரை ஓரங்களில் ஒதுக்கப்பட்டு பளபளத்துக் கொண்டிருந்த சிப்பிகளைக் கண்ட, இத்தீவின் பூர்வீகக் குடிகள் படிப்படியாகக் கடலை ஆராய்ந்து முத்தைக் கண்டுபிடித்திருக்கவேண்டும்; அல்லது ஆழ்கடலில் சங்கு குளிக்கச் சென்ற சுளியோடி முதல்முதலாக முத்துச் சிப்பிகளைக் கண்டு எடுத்து வந்துமிருக்கலாம்.

இந்த நூற்றுண்டின் இறுத்திக்காலம் வரை எங்கள் நாட்டினருக்கும் மீன்களைப் பற்றியும் மீன்கள் இருக்கும் பிரதேசங்களைப் பற்றியுமுள்ள அறிவிலும் பார்க்க முத்துக்கள் பற்றியும் முத்துச் சிப்பி இருக்கும் இடங்களைப் பற்றியும் கூடுதலான அறிவு இருந்துவந்திருக்கிறது என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன.

இலங்கை அந்நியராட்சிக்குக் கீழ் வருவதற்கு முன்னரே இயற்கை வளமான இந்த முத்துக்கள்

விலைமதிப்புள்ள பொருட்களென்பதை நம் மக்கள் அறிந்திருந்தார்கள். அப்படியிருந்தும் இந்நூற்றுண்டின் முற்பகுதியிற்றுன் அவைகளைப்பற்றித் துருவித்துருவி ஆராய்ச்சிகள் விஞ்ஞான முறையில் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாராய்ச்சிகளுக்கு டொனன், கெலாட், கேட்மன், ஹோர்னல், ஜேம்சன், மல்பாஸ், பியர்சன், சிப்பிலி, சவுத்வெல் போன்ற ஆராய்ச்சி அறிஞர்கள் பேருதவி புரிந்து இருக்கிருர்கள். இப்பெரியார்களுடைய ஆராய்ச்சிகளின் பலாபலன்கள் தற்போதைய வேலைகளுக்கு மிகவும் உதவி புரிகின்றன.

இவர்கள் கோட்டுப் படங்கள் தயாரித்து அவைகளில் சிப்பி பார்களின் நிலைகளைச் சரிவரப் படம் போட்டிருக்கிருர்கள். வருடத்தில் முத்துச் சலாபங்கள் இருமுறை அளவிடப்படுகின்றன. முத்துச் சிப்பிகளின் தொகை, அவைகளின் முதிர்ச்சி, விளைவு போன்ற இன்னேரன்ன விடயங்களும் ஆராயப்படுகின்றன. வயது முதிர்ச்சியைப் பொறுத்து சிப்பிப்படைகள் புறம்பு பண்ணப்பட்டு அவைகள் எந்தெந்த ஆண்டுகளில் முத்துக் குளிப்பதற்குத் தகுதிவாய்ந்த நிலையை அடைகின்றன என்பது குறித்து வைக்கப்படுகின்றது. அதையொட்டியே குறித்த வருடத்தில் குறித்த இடத்தில் முத்துக் குளிப்பும் நடைபெறும். 1955 ம் ஆண்டு தொடக்கம் ஒழுங்கு முறையாக நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் விளைவாக 1958 ம், 1960 ம் ஆண்டுகளில் முத்துக் குளிப்புகள் நடந்தன.

பண்டைக் காலத்திற்போல இப்போது முத்துக் குளிப்பதற்கு வெற்றுடல் சுளியோடுபவர்கள் உபயோகிக்கப்படுவதில்லை. இதற்குக் காரணம் இலங்கையில் இத்தகைய சுளியோடிகள் போதிய அளவில் இல்லாமையும், அப்படிக் கிடைக்கக் கூடியவர்களுக்குக்கூட முத்துக்குளித்தல் சங்கு குளித்தலைப் போல் இலாபமளிப்பதாய் இல்லாதிருத்தலுமாகும். கனடாவின் மேற்குக் கரைகளில், உபயோகிக்கப்படுவன போன்ற 40 அடி நீளமான இரண்டு படகுகளைக் கடல் தொழில் வேலைகளுக்காக கொழும்புத்திட்டத்தின் கீழ் கனடா அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு கொடுத்திருக்கிறது. இப்படகுகள் சுளியோடுபவர்களுக்குப் பதிலாக, முத்துச் சிப்பிகளை வாரிக் கூட்டி எடுக்கும் றெய்களை இயக்குவதற்கு, உபயோகிக்கப்படுகின்றன. படகுகள் தண்ணீர் மேற்பரப்பில் போய்க்கொண்டிருக்கும்போது மேற்கூறிய உலோகத்தாலான வலைகளைக் கொண்ட றெய்கள் கடலின் அடியில் இருப்பவைகளைக் கூட்டிவாரிக்கொண்டு செல்லுகின்றன. இவ்விதம் கூட்டிவாரப்படும் சிப்பிகள் இயந்திர மூலம் படகுத் தளத்தில் கொண்டு வந்து கொட்டுப்படுகின்றன. தளத்தில் கடற்பாசி, கல் முதலியனவைகள் அகற்றப்பட்ட பின், சிப்பிகள் கயிற்றுச் சாக்குகளில் போடப்பட்டு “சீல்” பண்ணப்படுகின்றன. அண்மைக் காலத்து முத்துக் குளிப்புகள் எல்லாம், கரையிலிருந்து 12, 13 மைல்கள் தூரத்தில் உள்ள செந்நிறமான முத்துக்களங்களிலேயே நடந்தன. முத்துக் குளிப்பு நடவடிக்கைகளுக்கு தலைமைத்தானமாக விளங்கும் இடம் சிலாபத்துறையாகும். இங்கிருந்து முத்துக் குளிக்கச் செல்லும் படகுகள் சூரிய உதயத்துக்கு முன்னதாகவே புறப்பட்டு குறித்த இடத்திற்கு சுமார் இரண்டு மணித்தியாலங்களில் போய்ச்சேர்கின்றன. அங்கு மாலைவரை முத்துக் குளிப்பு நடைபெறும். பின்னர் கிட்டத்தட்ட பொழுதுபடும் நேரத்துக்கு படகுகள் துறைக்கு மீண்டும் வந்து சிப்பிச் சாக்குகளை இறக்குகின்றன.

1960 ஆம் ஆண்டு வரையிலும் முத்துச் சிப்பி விற்பனைக்கு ஏலம் போடும் முறை கையாளப்பட்டது. சாதாரணமாக சலாபத்துறையிலேயே ஏல விற்பனை நடைபெறும். 1958 ஆம் ஆண்டு நடந்த முத்துக் குளிப்பு ஏறக்குறைய 32 ஆண்டுகளுக்குப் பின்னர் நடந்தது. அத்துடன் பொது மக்களின் ஆர்வத்தையும் கவனத்தையும் ஈர்க்கும் நோக்கத்தோடு முத்துச் சிப்பிகள் கொழும்புக்கும், தீவின் மற்றும் பிரதான நகரங்களுக்கும் கொண்டுசெல்லப்பட்டு ஏலத்தில் விற்கப்பட்டன.

**முத்துக் குளிப்பு—பழையமுறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முத்துச் சிப்பிகளை படகில் இறக்குதல்

அப்படி விற்கப்பட்ட முத்துச்சிப்பிகளை, வியாபாரிகள் வாங்குவதற்குச் சந்தர்ப்பம் அளிக்காது, பொதுமக்களே வாங்கினுர்கள் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. சென்ற வருடத்தில் பர்ட் சார்த்தமாக கேள்விப் பத்திரங்கள் மூலம் முத்துச் சிப்பிகள் விற்கப்பட்டன. வியாபாரிகள் அவற்றை ஏற்று சிப்பிகளை வாங்கியமுறை திருப்தியளிப்பதாயிருந்தது. ஏலவிற்பனை, கேள்விப்பத்திர விற்பனை இரண்டிலும் நன்மைகளும் தீமைகளும் கலந்திருக்கின்றன. இவ்விருமுறைகளில் எதை அனுசரித்தாலும், நாம் ஒரு விடயத்தை முக்கியமாய்க் கவனிக்க வேண்டும். இங்கு விற்பனைக்குக் கிடைக்கும் முத்துக்களின் தொகையுடன் ஒப்பிடும்போது, முத்துச் சந்தை இலங்கையில் வரையறுக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டிருப்பதே அந்த அம்சமாகும்.

முன்நடந்த முத்துக் குளிப்புகளின்போது மதுரை, இராமநாதபுரம், திருச்சினுப்பள்ளி போன்ற தென்னிந்திய நகரங்களைச் சேர்ந்த செல்வம் மிகுந்த செட்டிமார்களே, முத்துச் சிப்பிகளை வாங்குவதில் முக்கியஸ்தர்களாக விளங்கினர். 1905 ஆம் ஆண்டில் இந்தியர்கள் 99 சதவிகிதமான முத்துச் சிப்பிகளையும் இலங்கையர் ஒரு சத விகிதமான முத்துச் சிப்பிகளையும் வாங்கியிருப்பது இங்கு கவனிக்கற்பாலது. மத்திய அமெரிக்காவிலுள்ள வெனசூலா, பாகிஸ்தான் முதலிய பாரசீகக் கால்வாய் பிரதேசம், பாகிஸ்தான் முதலிய இடங்களில் உற்பத்தியாகும் உலக இயற்கை முத்துக்களின் பண்டகசாலையாக இந்தியா அன்றும் இன்றும் மிளிர்ந்து வருகிறது. முத்துக்கள் சிப்பிகளிலிருந்து எடுக்கப்பட்டு பக்குவம் செய்யப்படாத நிலையில் பம்பாய்க்கு அனுப்பப்படுகின்றன. அங்கு தேர்ச்சிமிகுந்த நுண்தொழிலாளர்களால் அவை மினுக்கப்பட்டு உருவாக்கப்படுகின்றன. மாலைகளில் கோக்கப்படும் முத்துக்களுக்கு நடுவில் துளை இடப்படுகிறது. பின் அவை ஐக்கிய அமெரிக்க நாடுகள், பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம் என்னும் நாடுகள் உட்பட உலகின் பல பாகங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த முத்துக் கைத்தொழில் நினைவுக் கெட்டாத காலந் தொட்டு பம்பாய் நகை வியாபாரிகளின் ஏக போக உரிமையாக இருந்து வருகிறது.

இயற்கை முத்துக்கள் இன்னும் விலையுயர்ந்தவைகளாகவே இருக்கின்றன. ஆனாலும் மற்றைய பொருட்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் அவ்விலையேற்றம் விகிதாசாரப்படியான ஏற்றமாக இல்லை.

முத்துக் குளிக்குமிடம்



இயற்கை முத்துக்கள் கவர்ச்சிகரமானவை யெனினும் செயற்கை முத்துக்கள் உபயோகத்தில் வந்த பின்னர், அவற்றுக்கு முன்னிருந்ததைப் போல் அதிக கிராக்கி இல்லை.

சீனர்கள்தாம் முதல் முதலில் செயற்கையாய் முத்துக்களை வளர்க்கும் முறையைக் கண்டுபிடித்தவர்கள் என்று சொல்லப்படுகின்றது. பதின் மூன்ரும் நூற்ருண்டிலேயே இவர்கள் புத்தரின் உருவம் போன்ற சின்னஞ் சிறு உருவங்களை நன்னீரில் வாழும் உயிரினங்களுக்குள் வைத்து அவைகளைத் திரும்பவும் அவைகளின் இயற்கையான சூழ்நிலையில் வாழும்படி விட்டுவைத்தார்கள். இப்படி விடப்பட்ட சிறு உருவங்களைச் சுற்றி முத்துக்களாகப் பின் பரிணமிக்கும் பொருள் வளர்ச்சியுறுகின்றது. சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்ட இம்முறை 1890 ஆம் ஆண்டுக்குப் பின்னரேதான் வியாபார நோக்கத்துடன் விஸ்தரிக்கப்பட்டது. இப்போது வளர்ப்பு முத்துக்கள் ஜப்பான், அவுஸ்திரேலியா, பிலிப்பைன், பர்மா, இந்தோனீசியா போன்ற இடங்களில் வெற்றிகரமாக உற்பத்தியாக்கப்பட்டு வருகின்றன. வளர்ப்பு முத்துக்களுக்கு பிறநாட்டுச் சந்தைகளில் உள்ள சாதகமான நிலையாலும், அவைகளுக்கான தேவையின் அதிகரிப்பாலும் ஜப்பானில் இம் முத்துக்களின் உற்பத்தி பெருகியிருக்கிறது. அண்மையில் சில ஆண்டுகளாக வளர்ப்பு முத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதுடன் அவற்றின் அளவும் தரமும் சீர்திருந்தியுள்ளன. பொதுவாக யப்பானில் உற்பத்தியாகும் எல்லா முத்துக்களும், அதாவது 98 சத விகிதமானவை ஐக்கிய அமெரிக்கா, சுவிற்சர்லாந்து, மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், இந்தியா போன்ற 79 நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இதில் ஐக்கிய அமெரிக்கா மாத்திரம் 60 சத விகித முத்துக்களை இறக்குமதி செய்வது குறிப்பிடத்தக்கது. ஏற்றுமதி செய்யப்படும் முத்துக்களின் தரத்தையும் உத்தரவாதப் படுத்தும் நோக்கத்தோடு 1952 ஆம் ஆண்டில் ஜப்பானிய முத்து வளர்ப்புத் தொழிற் சட்டம் ஒன்று இயற்றப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாக்கப்படும் முத்துக்கள் பரிசோதிக்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் குறைந்த ரக முத்துக்களை ஏற்றுமதி செய்தல் முடியாது. அமுலிலுள்ள பிரமாணங்களின்படி அவற்றை அரசாங்கம் விலை கொடுத்து வாங்கி எரித்துவிடுகின்றது.

இலங்கையிலும் முத்து வளர்ப்பது சாத்தியமாகும். ஆனல் நல்ல விலைக்கு விற்கப்படக்கூடிய முத்துக்களை வளர்ப்பதற்கு முன்னர், முத்துச் சிப்பிகளை வளர்த்தல் சம்பந்தமான பல்வேறு தொழில்நுட்ப முறைகள் பற்றியும் முத்துக்கள் உண்டாவதற்கான பொருட்களை சிப்பிகளுள் நுழைப்பது போன்ற விடயங்கள் பற்றியும் அறிந்து தேர்ச்சி அடையவேண்டியது மிகவும் அவசியமாகும்.

---

## தமிழ் பேசும் பிள்ளைகளுக்குக் . . .

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற பட்டதாரிகளாவர். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 8·5 விகிதம் பட்டதாரிகள் இருக்கையில் மற்றைய இடங்களில் 3·1 விகிதம் பட்டதாரிகள்தான் இருக்கிறர்கள். பயிற்சிபெற்ற ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 48·8 விகிதத்தினரும் மற்ற எல்லா மாகாணங்களிலும் 25·7 விகிதத்தினரும் செயலாற்றுகிறர்கள்.

**பின்வரும் அட்டவணை இப்போதுள்ள நிலைமையைத் தெளிவாய்க் காட்டுகிறது**

| | வடக்கு, கிழக்கு மாகாணங்களில் | மற்ற மாகாணங்களில் |
|---|---|---|
| பயிற்சி பெற்ற பட்டதாரிகள் | 2·4% | 0·7% |
| பட்டதாரிகள் | 8·5% | 3·1% |
| பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் | 48·8% | 25·7% |
| தராதரப்பத்திரம் பெற்றேர் | 14·5% | 37·7% |
| தராதரப் பத்திரமற்றேர் | 25·8% | 32·8% |

தகவற் பகுதி, கொழும்பு,
1961 ஆம் மே மீ 25 உ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாகூர் அஞ்சலி

அளப்பரும் இயற்கைத் திறனும், வியத்தகு தோற்றப் பொலிவும் கொண்ட குரு தேவரின் பாத நிழலில் இருந்து அவருடைய சீரிய பாரம்பரியத்தினுல் சூழப்பெற்று வாழ்ந்து வந்த நம்மையெல்லாம் இவ்வுலகில் அனுதைகளாக இருளில் விட்டுச் சென்று விட்டார் குருதேவர். பண்டைக்காலத்தினதும், இக்காலத்தினதும் அறிவுச் செல்வத்தை எமது நாட்டில் மட்டுமன்று உலகெங்கணும் ஒளிவீசிப் பிரகாசித்துக் கொண்டிருந்த பாரத நாட்டின் மிகப் பெரிய நட்சத்திரம் மறைந்துவிட்டது. எமது நெஞ்சங்கள் வெறுமையாகிவிட்டன. ஆனுல், அவரது குரல் எமது செவிகளில் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றது. சமீபத்தில் அவர் எழுப் பிய உணர்ச்சி மிகு சங்கநாதம் எமக்கு வழிகாட்டும் நட்சத்திரமாக இருக்கும். பாரத நாட்டில் பண்டைஞான்றிருந்த மெஞ்ஞானிகள் போன்று இவரும் என்றும் அழியாத செல்வத்தை நமக்கு விட்டுச் சென்றுள்ளார். இவ்வளவு பெரிய ஆத்மா, எமக்களித்துவிட்டுச் சென்ற செல்வத்தை நாம், பெருமையுடனும், அன்புடனும், பணிவுடனும் எண்ணுவோம். இந்த அரும் பெரும் செல்வத்தை நாம் கண்ணின் மணி போல் காப்பதுடன் குருதேவரின் இலட்சியங் களாக அமைந்த சாந்திநிகேதன், விசுவபாரதி ஆகியவற்றின் வளர்ச்சிக்காக ஒவ்வொரு இந்தியனும் ஒல்லும் வகையான் உழைப்பது தன் கடமையெனக் கருதுவான் என்று உள்ளம் தொட்டு வேண்டுகின்றேன்.

ஜவஹர்லால் நேரு.

## எனது பிரார்த்தனை

கடவுளே, நீர் எனக்கு அளிக்க விரும்பும் சோதனையைத் தாங்குவதற்கு வேண்டிய சக்தியை எனக்கு அருளும். உமக்கான சேவையில் ஏற்படக்கூடிய தவிர்க்கமுடியாத பெரும் வேதனையைப் பொறுத்துக் கொள்ளும் வைராக்கியத்தை எனக்குத் தாரும். எனது இதயத் திலே அந்த வேதனையை நிரப்பும்.

உமது கரங்களினுலே நீர் அருளும் இந்தத் துன்பமாகிய கொடையிலிருந்து விடுபடு வதற்குத்தானும் நான் விரும்பவில்லை. இத்துன்பத்துடன் இதனைத் தாங்கும் வைராக்கியத் தையும் நீர் எனக்கு அருளினுல், இது எனக்கு பெறுதற்கரிய பேரின்பமாகும். உம்மை மறவாதிருக்கும் அருளையோ, உலக ஆசாபாசங்களில் என் மனம் சிக்காதிருக்கும் பாக்கியத் தையோ எனக்கு அளித்து நீர் விரும்புமளவில் சேவை செய்ய வரமளியும்.

நீர் விரும்பினுல், வேண்டிய மட்டும் என்னை அடக்கும். ஆனுல் உம்மை நோக்கி என் இதயத்தை மாத்திரம் திறந்துவைக்க அருள் பாலியும். எந்தக் காரணத்துக்காகவும் நான் உம்மை மறந்துவிடும் ஒரே துர்ப்பாக்கியம் என்வாழ்விலே ஏற்படாது பாதுகாக்கும்படி உம்மிடம் இரந்து கேட்டுக் கொள்ளுகிறேன்.

இரவீந்திரநாத் தாகூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்மையில் கண்டெடுக்கப்பெற்ற இந்து விக்கிரகங்கள்

டக்டர் சாள்ஸ் கொடக்கும்புற அவர்கள்—
தொல்பொருட் கலைப்பகுதிக் கொமிஷனர் (தமிழாக்கம் : குல. சபாநாதன்)


பொலநறுவை சோழர் சாசனங்களில் புலை நரியெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது புலஸ்தி நகரம் எனவும் கூறப்படும். இலங்கையில் சோழர் ஆட்சி ஓங்கியிருந்த காலத்தில் அவர்கள் பொலநறுவையை இராசதானியாக்கி அநேக சிவாலயங்களையும் விஷ்ணு ஆலயங்களையும் பத்தினி (கண்ணகி) கோயில்களையும் கட்டி யெழுப்பினர்கள். ஈழநாட்டுத் தஞ்சாவூர் அல்லது கங்கை கொண்ட சோழபுரம் போலவே பொலநறுவை காட்சியளித்தது. சோழர் காலத்தில் வெண்கலச் சிலை வார்ப்புக்கலை சிறந்தோங்கியது. பலதிறப்பட்ட தெய்வ வடிவங்கள் வார்க்கப்பட்டன. பொலநறுவையில் பூசிக்கப்பட்டு வந்த தெய்வ வடிவங்களுட் சில 1907 ம் ஆண்டில் வெளிக்கிளம்பின. பின்னர் 1960 ம் ஆண்டிலும் தெய்வாதீனமாக வெளிக்கிளம்பின. இவற்றைப் பற்றிய கட்டுரையினை முதன் முதலாக ஸ்ரீலங்காவில் வெளியிடுமாறு தந்துதவிய டக்டர் கொடக்கும்புற அவர்களுக்கு எங்கள் நன்றி உரியதாகுக. (ப—ர்)

### முன்னுரை

பொலநறுவையில் சோழர் ஆட்சிக் காலத்தில் அநேக சிவாலயங்களும் விஷ்ணு ஆலயங்களும் தலைநகரை அலங்கரித்தன. இவை பின்னர் அந்நியர் ஆட்சிக் காலத்தில் அழிக்கப்பெற்றன. அவற்றுள் சிலவற்றைப் பாதுகாக்கும் வேலையில் தொல்பொருட் கலைப் பகுதி ஈடுபட்டுள்ளது. இப்பகுதியால் 5 ஆம் இலக்கச் சிவாலயம் எனக் குறிப்பிடப்படும் ஆலயத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் அதனைச் சூழ்ந்து கிடக்கும் அழிபாடுகளை அகற்றும் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும்பொழுது 1960 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதியன்று, சரஸ்வதியெனக் கருதப்படும் சிறு வெண்கலத் திருவுருவம் மேற்கூறிய சிவாலயம் அமைந்துள்ள இடத்துக்கும் 4 ஆம் இலக்கமிடப்பட்டுள்ள விஷ்ணு கோயிலுக்குமிடையில் கண்டெடுக்கப்பட்டது. இப்பொழுது அழிவுற்ற நிலையிற் காணப்படும் விஷ்ணு கோயிலின் விமானத்தில் நாகபாம்பின் படம் அமைக்கப்பெற்றிருந்த காரணத்தால் இதனை "நாகபடவிகாரை" எனப் பொது மக்கள் கூறிவந்தனர்.

1908 ஆம் ஆண்டுக்கான தொல்பொருட் கலைப் பகுதியின் பரிபாலன அறிக்கையில் 5 ஆம் இலக்கச் சிவாலயத்தைப் பற்றிய விபரம் (பக். 4–7) காணப்படுகிறது. இஃது இலங்கைப் பருவ காலப் பத்திரமாக 1913 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டது. இவ்வறிக்கையில் 5 ம் சிவாலயத்துக் கண்மையில் இருந்த விஷ்ணு ஆலயத்தைப் பற்றிய விவரமும் உண்டு.

1907–1908 ல் கண்டெடுக்கப்பெற்ற திருவுருவங்கள் முதலியவற்றின் விவரம் மேற்கூறிய அறிக்கை



விஷ்ணு



வெவ்வினையை வேரறுக்கும் விநாயகப்பெருமான் (பீடத்துடன் இதன் உயரம் 32 அங்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்திரசேகரர்

யில் (இ) பிற் சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ளது. அவற்றின் படங்களுக்கு xv, xvi, xvii, xviii எனும் இலக்கங்கள் குறிக்கப்பட்டுச் சேர்க்கப்பட்டுள்ளன.


## தீபாவளியன்று

5 ஆம் இலக்கச் சிவாலயத்தின் பாரிய செங்கல் விமானம் விழுந்து கிடக்கும் அழிபாடுகளுக்குப் பின்புறத்தில் மேலும் திருவுருவங்கள் கண்டெடுக்கப்பட்டன என அறிவிக்கப்பட்டது. எனவே, **1960 ஆம் ஆண்டு செப்ரெம்பர் பதினெட்டாந் திகதியன்று அதாவது தீபாவளிப் பண்டிகையன்று, மருள் நீங்கி சைவமக்கள் உள்ளத்தில் தீப ஒளி பிரகாசிக்கும் தினமும், கொடிய அரக்கன் ஆட்சி நீங்கி வானவரும் மக்களும் தீபவரிசைகள் வைத்து வீடுகளில் ஒளியானது பிரகாசிக்கும் தினமும் கூடிய சுபதினத்தில், யானும் எங்கள் தொல்பொருட்பகுதிப் படப்பிடிப்பாளர் திரு. என். எச். ஆர். நல வங்சோ என்பவரும் மேற்குறித்த இடத்தில் கிண்டிப்பார்க்கும் வேலையை ஆரம்பித்தோம். தேவாலய அத்திவாரத்துக்கண்மையில் 5 அடி நீளமும் 3 அடி அகலமும் 3 அடி ஆழமும் உள்ள ஒரு குழியில் அழகிய திருவுருவங்கள் புதைக்கப்பட்டிருப்பதைக் கண்டோம்.** இந்தக் குழி இத்திருவுருவங்களைப் புதைத்து வைப்பதற்கென்றே கிண்டப்பட்டதென்பது நன்கு புலனுயிற்று. இந்தச் சிறிய திருவுருவங்கள் அக்காலத்தில் கைக்கொண்டொழுகப்பட்ட வழிபாட்டு முறைப்படி வரிசையாக வைக்கப்பட்டிருந்தன.

## ஆடும் பெருமான்

**குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும், இனித்தமுடைய எடுத்த பொற் பாதமும் உடைய நடராசர் திருவுருவத்துக்கும்** (திருவாசியும் பீடமும் வேருகக் கண்டெடுக்கப்பெற்றன) **சோமாஸ்கந்த மூர்த்தத்துக்கும்** (உமையின் திருவுருவமும் ஸ்கந்தனின் திருவுருவமும் காணப்படவில்லை. (இதன் திருவாசியும் பீடமும் வேருகக் கண்டெடுக்கப்பட்டன) **முதன்மைத் தானம் அளிக்கப்பட்டிருந்தன. நாதாந்த நடன மிடும் நடராசப் பெருமானுக்குச் சிறப்பான தனி இடம் இச்சிறு குழியிலும்கூட அளிக்கப்பெற்றிருந்தது.** இவ்வழகிய நடராசர் திருவுருவத்தின் விரித்த செஞ்சடை காணப்படவில்லை. காதணிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆண்தெய்வத்திருவுருவங்களுக்குப் பணிபுரியும் பான்மையில் பெண் தெய்வத் திருவுருவங்கள் இரண்டு காணப்பட்டன. ஒன்று பார்வதி அதாவது சிவ பெருமானின் சக்தி வடிவம். மற்றதும் பார்வதி அல்லது இலக்குமி திருவுருவம். விஷ்ணுவின் சக்தி இலக்குமி எனப்படும். இந்தத் திருவுருவங்களை வழிபடும் பாவனையில் பக்தர் இருவரின் திருவுருவங்கள் காணப்பட்டன. ஒருவர் மணிமுடி தரித்திருந்தார். அவர் ஓர் அரசன் என்பதை இம்முடி குறிக்கின்றது. மற்ற பக்தர் சாதாரண தலையணி அணிந்திருக்கிருர். பக்தர் திருவுருவங்களில் ஒன்றைத் தவிர ஏனைய சகல திருவுருவங்களுக்கும் பீடங்கள் உண்டு. **கரியுடன் காணப்பட்ட தூயமண் கலசமானது இத்திருவுருவங்களுக்குக் கடைசியாக நடைபெற்ற பூசையினை மௌனமாக நினைவுறுத்தும் சான்ருக அமைந்திருந்தது.** சுதாசன சக்கரமும் அதாவது விஷ்ணு மூர்த்தியின் சக்கரமும் முதல்நாள் கிடைத்த பொருட்களில் ஒன்ருகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆடும் பெருமான் (பீடத்துடன் இதன் உயரம் 55¾ அங்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT· O ROAD
NALLUR, JAFFNA
No.........

## இதர திருவுருவங்கள்

இத் திருவுருவங்கள் கண்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதே இடத்தில் வேறு பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன. ஒக்ரோபர் 26 ஆம் திகதியன்று, தேவாலயத்தின் தென்புறத் தூணின் பீடத்திலிருந்து 27½ அடி தூரத்தில் ஒரு மட்பாண்டத்தில் சிறு திருவுருவங்களும் வேறு பொருட்களும் கண்டெடுக்கப்பெற்றன. இந்த மட்பாண்டத்தில் இருந்த பொருட்களின் விபரம் வருமாறு:—

## வெண்கலச் சிறு திருவுருவங்கள்

1. (அ) பீடம், திருவாசி, விரித்த செஞ்சடை ஆகியவற்றுடன் கூடிய நடராசர் திருவுருவம்.

(ஆ) நாய் வாகனத்துடன் கூடிய பைரவர் திருவுருவம்.

(இ) மயில் வாகனன் திருவுருவம்.

(ஈ) ஒற்றைக் காலைத் தூக்கி ஆடும் நர்த்தன பாலகிருஷ்ணன் திருவுருவம்.

(உ) நின்ற பாவனையில் உமையம்மை திருவுருவங்கள்.

(ஊ) வீற்றிருக்கும் பாவனையில் உமையம்மை திருவுருவம்.

(எ) நந்தியெம்பெருமான் திருவுருவம்—நந்திகேஸ்வரர்.

2. கணேசர் சிலாவிக்கிரகம்.

3. கணேசர் களிமண் விக்கிரகம் (உடைந்த நிலையில்).

4. (அ, ஆ) 2 சிவலிங்கத் திருவுருவங்கள்—ஒன்றில் ஆவுடையார் பின்னப்பட்டுள்ளது.

(இ) 3 முக்காலிகள்.

(ஈ) ஒரு முக்காலியின் மேல் தூபத்தட்டு.

(உ) ஒரு முக்காலியின் மேல் கர்ப்பூரத்தட்டு.

(ஊ) கிண்ணமும் மூடியும்.

(எ) ஓர் அகப்பை.

(ஏ) ஒரு சங்கு.

இந்த மட்கலசத்துக்கண்மையில் ஒரு கிண்ணம், மணியின் நாக்கு, கைபிடி ஆகியவையும் வேருகக் கண்டெடுக்கப்பட்டன.

## காரைக்கால் அம்மையார் திருவுருவம்

அதே தினத்தில், மேற்கூறிய கட்டடத்துக்கு 11 அடி தூரத்தில், அதே பக்கத்தில் ஒட்டியுலர்ந்த என்புக்கூடேயுருவாய பெண் திருவுருவம் ஒன்று காணப்பட்டது. இது காரைக்கால் அம்மையாரின் திருவுருவமாகும்.

சிவாலய கட்டடத்திலிருந்து, மேற்றிசையில் 18½ அடி தூரத்தில் நிலத்திலிருந்து 2½அடி ஆழத்தில் விக்கினம் தீர்க்கும் விநாயகப் பெருமானின் (கணேசரின்) பெரிய வெண்கலத் திருவுருவம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

நவம்பர் மாதம் 28 ஆம் திகதியன்று பின்வரும் பொருட்கள் அவ்வவற்றிற்கெதிரே குறிக்கப்பட்ட இடங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டன. கோயிலின் வடதிருவாயிலிலிருந்து 6 அடி தூரத்தில் கதாயுதம் தாங்கிய வெண்கல விஷ்ணு திருவுருவமும் (சிறியது) விளக்கும் விளக்குத் தம்பமும், வடதிருவாயிலிலிருந்து 13½ அடி தூரத்தில் வெண்கல மணியும் அதே வாயிலிலிருந்து 33⅜ அடி தூரத்தில் 2 குத்து விளக்கும் கண்டெடுக்கப்பட்டன.



சுந்தரமூர்த்தி சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைலை நாயகன் கனிவுடன் 'அம்மையே' எனவழைத்த காரைக்காலம்மையார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைசிறந்த விக்கிரகங்கள்**

**1960 ஆம் ஆண்டின் பிற்கூற்றில் கண்டெடுக்கப்பட்ட வெண்கல விக்கிரகங்கள் இலங்கையிலே இதுவரை கண்டெடுக்கப்பெற்றவற்றுளெல்லாம் மிகச் சிறந்தன. கண்டெடுக்கப்பெற்ற பலதிறப்பட்ட பொருட்களை நோக்குமிடத்து வேறு எவ்விடத்திலாவது இவ்விதம் கிடைத்திருக்கமாட்டாதெனக் கருதுகிறேன்.**

சைவக் கடவுட் சிறு திருவுருவங்கள் 1907 ஆம் ஆண்டில் முதலாம் இலக்கமிடப்பட்ட சிவாலயத்திற் கண்மையில் இவ்வித சந்தர்ப்பத்தில் கண்டெடுக்கப்பட்டன. (தொல்பொருட்கலைப் பகுதி அறிக்கை 407 இலங்கைப் பருவகாலப் பத்திரம் 1911–பக். 36). இப்போது திருவுருவங்கள் வெளிக்கிளம்பிய அதே இடத்தில் அதாவது 5 ஆம் இலக்கமிடப்பட்ட சிவாலயத்திலும் 1908 ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பெற்ற பொருட்களின் விபரங்களை 1908 ஆம் ஆண்டின் தொல்பொருட் கலைப்பகுதி நிர்வாக அறிக்கையில் (பக். 17-18) காணலாம். (இலங்கைப் பருவ காலப் பத்திரம் 1913).

**எனது கருத்து**

1913 ஆம் ஆண்டின் இலங்கைப் பருவகாலப் பத்திரத்தில் (பக். 36) முன்னுள் தொல்பொருட் பகுதி அதிபர் **திரு. எச். சி. பி. பெல் அவர்கள்** அக்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட வெண்கலத் திருவுருவங்கள் "இந்தியாவில் வார்க்கப்பட்டன என்பதிற் சந்தேகமில்லை" யெனக் குறிப்பிட்டுள்ளார். சிறிய திருவுருவங்கள் விஷயத்தில் இது ஓரளவு உண்மையாயிருக்கலாம். ஆனுல் இப்பொழுது கண்டெடுக்கப்பட்ட பெரிய வெண்கல விக்கிரகங்களை உன்னிப்பாகப் பரிசீலனை செய்யுமொருவர் **திரு. பெல்** அவர்களின் கருத்தைத் திருத்தியமைக்குமாறு தூண்டப்படுவர். இந்து கோயில்களிற் பெரும்பாலனவையும் அவற்றுடன் தொடர்புள்ள சிற்பங்களும் ஐந்தாம் மகிந்தனின் ஆட்சியில் பதிஞேராம் நூற்ருண்டுக்கும் (கி.பி. 993) கி.பி. 1070 ஆம் ஆண்டில் முதலாம் விஜயவாகு அரசன் பொலநறுவையை வெற்றிகொண்ட காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் சோழர் ஆதிக்கம் இலங்கையில் ஓங்கியிருந்த காலத்திற்குச் சேர்ந்தனவாகும்.

பட விளக்கம்: 'அம்மையே' எனக் கைலைநாயகன் கனிவுடன் அழைத்த அம்மையாராகிய காரைக்காலம்மையார் திருவுருவம் கண்டெடுக்கப்பெற்ற சிலைகளுள் சிற்பக்கலையின் சிகரமாக, சிற்பியின் இதயத்துடிப்பின் பிரதிபலிப்பதாக, அழகொழுகு சிற்பமாக விளங்குகின்றது. ஈழநாட்டிலே இதுபோன்ற தலை சிறந்த திருவுருவம் இன்றும் காணப்படவில்லை. அன்றும் காணப்படவில்லை யெனலாம்.

**சிங்களச் சிற்பிகள்**

சிங்கள மக்களைத் தம் ஆட்சிக்குட்படுத்திய சோழர், தங்கள் கடவுளை வழிபட கோயில்கள் கட்டுவிக்கவும், திருவுருவங்கள் வார்ப்பிக்கவும் தொடங்கியபொழுது சிங்களச் சிற்பிகளை உபயோகித்திருத்தல் கூடும். பௌத்த விகாரைகளையும் பௌத்த திருவுருவங்களையும் அமைக்கவும் சுவர்ச் சித்திரங்களைத் தீட்டவும் பழகிக்கொண்ட சிங்கள மக்கள் கட்டடக்கலையிலும் சிறிய வேலையிலும் சித்திரத்திலும் நிபுணர்களாக விளங்கினுர்கள். இந்த உள்ளூர்ச் சிற்பிகளைச் சோழ மன்னர் வேலைக்கமர்த்திஞர்கள். இவ்வாறே போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோர் தம் தேவாலயங்களைக் கட்ட சிங்கள வேலையாட்களையே பயன்படுத்திஞர்கள்.




மயில் வாகனன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வயிரவ மூர்த்தி

## புதையல் வரலாறு

ஒரு நூற்றுண்டு காலமாக ஆதிக்கஞ் செலுத்தி பொலநறுவையிலிருந்த இந்து பூசகர்கள், விஜய பாகுவின் படையினர் வாகை சூடி நகருட் திடீரெனப் பிரவேசிப்பார்களெனக் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை. எனவே, திடீரெனத் தாக்குதல் ஏற்பட்டதனுல் திருவுருவங்களை எங்கேயாவது மறைத்து வைக்க வேண்டிய அவசியம் உண்டாயிற்று. இதன்காரணமாக திருவாபரணங்களை அதாவது, கழுத்து மாலை, தோடு முதலியவற்றைக் கழற்றி வைத்தனர் போலும். நல்ல காலம் பிறந்ததும் அவற்றைத் திருப்பிக் கொடுக்கும் நோக்குடன் கடைசியாக வழிபட்ட சைவபக்தர்கள் கழற்றியிருக்கலாம. மணி அடித்துத் தூப தீபம் காட்டிச் செய்த இறுதிப் பூசையானது அத்திருவுருவங்கள் இருக்க வேண்டிய இடத்தில் இருந்து அகற்றி அவசரமாகப் புதைத்து வைத்து அவற்றின் புனிதத் தன்மையை அழித்ததற்கு ஈடாக மாட்டாது. புலத்தி நகரம் வீழ்ச்சியடைந்தபோது மதிப்பிடற்கரிய இத்திருவுருவங்கள் பகைவர் கைக்குட் சிக்கியிருக்கும். அல்லது இன்னும் தொல்பொருட் பகுதித் தொழிலாளியின் மண்வெட்டியையும் கைக்கோடரியையும் எதிர்பார்த்து மண்ணுட் புதைந்து கிடக்கும்.

கண்டெடுக்கப்பட்ட திருவுருவங்களை நோக்குமிடத்து அவை திரிமூர்த்திகளில் சிவனையும் விஷ்ணுவையும் காட்டும் திருவுருவங்களாகவே காணப்படுகின்றன. பெரும்பாலானவை சிவமூர்த்தங்களே. முதலாம் இலக்கமிடப்பட்ட திருவுருவம் சரஸ்வதியெனக் கருதுவது சரியானுல் நான்முகன் (பிரம்மா) மூர்த்தத்துக்குரிய ஒரு திருவுருவமும் உண்டெனக் கருதலாம்.




சரஸ்வதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ மூர்த்தங்கள்
நடராசர்–திருவுருவம்—$55\frac{3}{4}$ அங். உயரம்

37 அங்குல உயரமுள்ள நடராசர் திருவுருவம் பீடத்தின் மீது வைக்கப்பட்டு திருவாசியும் சேர்க்கப் படின், அதன் முழு உயரம் $55\frac{3}{4}$ அங்குலமாகும். விரித்த செஞ்சடையும், காதணியும் இல்லாதிருந்த போதிலும், இதுவரை கண்டெடுக்கப்பெற்ற திரு வுருவங்கள் எல்லாவற்றிலும் இந்த ஆடும் பெரு மானின் அழகொழுகு திருவுருவம் தலைசிறந்த விக்கிரகமாகக் காணப்படுகின்றது. விரித்த செஞ் சடையும் காதணியும் இழந்துவிட்ட நிலையிலும் கூட இதுவரை கண்டெடுக்கப்பெற்ற நடராசர் திரு வுருவங்களுள் ஈடும் இணையுமின்றித் தலை யெடுத்து நிற்கின்றது.

1908 ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்ட செஞ்சடை இதற்குரியதாக இருககலாம். அல்லது அடி பாறி விழுந்து கிடக்கும் பாரிய விமானக் கட்டடத்தின் கீழ் புதையுண்டு இருக்கலாம். யார் அறிவார்! திருவாபரணங்களைப் பற்றி யான் முன்னரே குறிப் பிட்டுள்ளேன்.

ஆனந்த நடனமிடும் இத்திருவுருவத்தின் வசீகரமான முகத்தோற்றம் இம்முறை கண் டெடுக்கப்பெற்ற ஏனைய திருவுருவங்களின் தோற் றப் பொலிவு தேஜஸ் முதலியன தென்னிந்தியாவில் காணப்படும் திருவுருவங்களிலும் வேறுபட்டிருத் தலைக் காணலாம். ஆனந்தக் கூத்தனின் ஆடும் பாதத்தின் கீழ் கிடக்கும் முயலகனின் முகத் துக்கும் பொலநறுவையில் வட்டதாகை எனப்



சோமாஸ்கந்த மூர்த்தம் (பீடத்துடன் இதன் உயரம் 21 அங்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நடராசர் திருவுருவம் (சிறியது) (இதன் உயரம் 55 அங்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**படும் விசாரையிலுள்ள பூதகணங்களின் முகங்களுக்கும் அதிக ஒற்றுமையிருப்பதைக் காணலாம்.** இத்திருவுருவத்தின் பீடத்தில் காணப்படும் வாத்தியக் கோஷ்டியின் புடைச்சிற்பம் இலங்கையில் காணப்படும் இத்தகைய இதர சிற்பக் கட்டடத்துடன் ஒப்பிடுதற்கு ஏற்ற முறையில் அமைந்துள்ளது. இப்பொழுது கண்டெடுக்கப் பெற்ற சிறிய நடராசர் திருவுருவம் கூட—இதற்குப் பீடமும் விரித்தசடையும் உண்டு. இதன் உயரம் 55 அங்.—கைதேர்ந்த சிற்பி ஒருவனின் சிறந்த சிற்பவேலைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. ஒவ்வொரு அங்கமும் அழகுறத் தோற்றப் பொலிவுடன் வார்க்கப்பட்டிருத்தலைக் காணலாம்.

**2. சோமாஸ்கந்த மூர்த்தம்: பீடம் உட்பட இத் திருவுருவத்தின் உயரம் 21 அங். பீடம் வேறாகக் கண்டெடுக்கப் பெற்றது. திருவுருவம் உயரம் $16\frac{3}{4}$ அங். நீளம் $26\frac{1}{4}$ அங். ஆழம் $13\frac{1}{4}$ அங். திருவாசி $25\frac{3}{4}$ அங். உயரம்.** உமையம்மை திருவுருவமும் கந்தப் பெருமான் திருவுருவமும் காணப்படவில்லை. இந்த மூர்த்தத்தில் உள்ள திருவுருவத்துக்கும், திருகோணமலையிற் கண்டெடுக்கப்பெற்ற மூர்த்தத்தி லுள்ள திருவுருவத்துக்கும் (தொல்பொருட்கலைப் பகுதி நிர்வாக அறிக்கை 1950 ம் ஆண்டுக்குரியது) தென்னிந்தியாவிற் காணப்படும் இத்தகைய மூர்த்தத் திருவுருவங்களுக்கும் வேற்றுமையுண்டு. இப்பொழுது கண்டெடுக்கப்பெற்ற சோமாஸ்கந்த சுகர்சன மூர்த்தத்தில் சிவன் வலது காலைத் தொங்கவிட்டும், இடது காலை மடக்கியும் சுகர்சனத்திலிருக்கும் பாவனையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க சிறப்பியல்பாகும். ஆனால் பொதுவாக இத்தகைய மூர்த்தங்களில் பெரும்பாலும் இடது காலைத் தொங்கவிட்டும் வலது காலை மடக்கியும் சிவன் சுகர்சனத்திலிருப்பதுவே வழக்கமாகக் காணப்படும். சகல அங்கங்களும் முகப் பொலிவும் சிற்ப இலக்கணத்துக்கு அமையச் சிறப்பாகப் பொருந்தியிருப்பதை இம்மூர்த்தத்தில் கண்டு இறும்பூதெய்தாதிருக்க முடியாது.

**3. வைரவ மூர்த்தம்:** சிவபெருமான் வைரவ மூர்த்தத்தில் காட்சியளிக்கும் தோற்றத்தைக் காட்டும் திருவுருவம் ஒன்று உண்டு. வைரவருடைய வாகனமாகிய நாய் பின்னால் நிற்கிறது. இளமைப் பருவத்தையும் வீரத்தையும் காட்டுகிறது இவ்வழகிய திருவுருவம். இச்சிறு திருவுருவத்தின் உயரம் $4^3/_8$ அங். பீடத்துடன் கூடியபோது உயரம் $5^5/_8$ அங். தென்னிந்தியாவிலுள்ள சிற்ப சாஸ்திர நூல்களில் விவரிக்கப்பட்ட பைரவ மூர்த்தி திருவுருவத்துக்கும் இப்பொழுது கண்டெடுக்கப்பட்ட திருவுருவத்துக்கும் வேற்றுமையுண்டு. இத்திருவுருவத்தில் ஏனைய பயங்கர வடிவமும் முற்றுகப் பிரதிபலிக்காமல், சிறிது சாந்தமும் ரூபலாவண்யமும் பொருந்தியிருப்பதைக் காணலாம்.

4. தேவிமார் திருவுருவங்கள், அவற்றைச் சரியாகக் கண்டு பிடிக்கும் வரை, சிவசக்திகள் அதாவது பார்வதி, உமையம்மை திருவுருவங்களாகவே தற்காலிகமாகக் கருதப்படுகின்றன.

இவ்விரு திருவுருவங்களில் மிகப் பெரியதும் அழகுவாய்ந்ததும் பார்வதி திருவுருவமாகும். இது சிவகாமசுந்தரி திருவுருவமாகும். (கண்டு பிடிப்பு இல. 5). இச்சிறு திருவுருவத்தின் உயரம்



உமாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........



$31\frac{1}{4}$ அங். பீடத்துடன் கூட உயரம் 38 அங். சில அம்சங்களில் பொலநறுவையிலுள்ள பராக்கிரமபாகு சிலையெனக் கருதப்படும் உருவத்திலுள்ள உடையலங்காரமும் இத்திருவுருவ உடையலங்காரமும் பிரித்தானிய பொருட்காட்சிச் சாலையிலுள்ள தாரா வென பௌத்த அறிஞர்களும், கண்ணகி சிலையென டாக்டர் ஆனந்தக்குமாரசுவாமி முதலிய சிற்ப சாஸ்திர நிபுணர்களும், கருதும் சிலையிலுள்ள உடையலங்காரமும் பெரிதும் ஒத்திருப்பதைக் காணலாம். வேறொரு பெண் தெய்வ மூர்த்தத்தின் திருவுருவம் $26\frac{1}{4}$ அங். உயரமுள்ளது. பீடத்துடன் இதன் உயரம் $32\frac{1}{2}$ அங். (கண்டு பிடிப்பு இல. 6) இத் திருவுருவத்தின் அங்க உறுப்புகளின் அமைப்பு, உடையலங்காரம், முகத்தோற்றம், உடல் அமைப்பு ஆகியவற்றில் முன்னர்க் குறிப்பிட்ட திருவுருவத்திலும் இது வேறுபட்டதாகக் கருதப்படுகிறது. உப்பிய முகம், குறுங்கழுத்து, விம்மிய மார்பு ஆகிய இவற்றைக் கொண்ட 6 ஆம் இலக்கத் திருவுருவம், கண்கவர் முகம், நெடுங் கழுத்து, உடலமைப்புக் கேற்ற மார்பு ஆகிய இயற்கையான தோற்றவமைப்புக்குரிய சிற்ப இலக்கணத்துக்கேற்ற திருவுருவத்துக்கு முற்றும் ஒத்திராத வகையில் காணப்படுகின்றது.

5. கண்டு எடுக்கப்பெற்ற விக்கிரகங்களில் சிவகுமாரர் இருவரும் காணப்படுகின்றனர். 10 ஆம் இலக்கமிடப்பட்ட திருவுருவத் தொகுதியில் அயிலெடுத்து மயிலேறி வரும் முருகனின் (மயில் வாகனன்–சிகிவாகனன்) திருவுருவமும் பீடத்துடன் காணப்படுகிறது. பீடத்துடன் இதன் உயரம் $5^1/_{16}$ அங். இத்திருவுருவம் ஒரு தலையுடனும் நான்கு கைகளுடனும் காணப்படுகிறது. ஆனால் ஆறுமுகமும் பன்னிருகையுமுள்ள சண்முகப் பெருமானுடைய (மகாசேனன்) திருவுருவத்துக்கு இது வேறுபட்டதாகும். பெண் தெய்வங்களின் சிறு திருவுருவங்களும் இத்தொகுதியில் காணப்பெற்றன. இவற்றுள் மிகவும் வனப்புவாய்ந்தது $3^3/_8$ அங். பீடத்திலமர்ந்துள்ள திருவுருவம். பீடத்துடன் இதன் உயரம் $4\frac{1}{4}$ அங். நிற்கும் பாவனையிலுள்ள இன்னொரு திருவுருவம் 4 அடி உயரமுள்ளது. இது இரட்டைப் பீடத்திலமர்ந்துள்ளது. பீடத்துடன் இதன் உயரம் $5^1/_{16}$ அங். ஆனால் இது முன்னர்க் குறிப்பிட்டது போல் அவ்வளவு சிறந்த தோற்றப் பொலிவுடன் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. இதே தொகுதியில், லலிதாசனத்தில் வீற்றிருக்கும் பெண் தெய்வத் திருவுருவத்தின் உயரம் $2^5/_8$ அங். இவற்றுள் இரண்டு வள்ளிநாயகி, தெய்வயானையம்மையார் இருவரையும் குறிப்பதாகலாம். மற்றது நடராச மூர்த்தத் திருவுருவமாக இருக்கலாம்.

பத்ம பீடத்திலுள்ள கணேசர் திருவுருவம் இதுவரையில் உலகத்தில் எப்பாகத்திலாவது கண்டெடுக்கப்படாத அழகொழுகு திருவுருவம் என்பதை எவருமே ஆட்சேபிக்க முடியாது. இதன் உயரம் 23 அங். பீடத்துடன் இதன் உயரம் 32 அங். கணேசர் இடது கரத்தில் சிங்கள புராணங்களில் குறிப்பிட்டவாறு மாங்கனி ஒன்றினை ஏந்திய வராகக் காணப்படுகிறார்.

சிறு சிலாவிக்கிரகமாகவும் கணேசர் தோற்றமளிக்கிறார். இத்திருவுருவத்தின் உயரம் 2 அங். மண்ணினாற் செய்யப்பட்ட திருவுருவம் சிறிது பின்னப்பட்டுள்ளது.

6. சிவ பக்தர் அல்லது நாயன்மார் மூவரின் திருவுருவங்கள் கண்டெடுக்கப்பெற்றன. ஆண்களின் திருவுருவம் இரண்டு, பெண்ணின் திருவுருவம் ஒன்று. ஆண் சிவ பக்தர் திருவுருவம் இராச உடை அணிந்த கோலத்தில் காணப்படுகிறது. இதன் உயரம் $26\frac{1}{2}$ அங். இது $3\frac{1}{4}$ அங். உயரமுள்ள பத்மபீடத்தில் வைக்கப்பட்டுள்ளது. இது சண்டேஸ்வரர் திருவுருவம் எனக் கருதப்படுகின்றது. மற்ற பக்தர் திருவுருவம் $\frac{1}{4}$ அங். பீடத்தில் அமர்ந்துள்ளது. தலையலங்காரம் எதுவுமில்லை. இதன் உயரம் $19\frac{3}{4}$ அங். இது சுந்தரமூர்த்தி சுவாமி திருவுருவமாக இருக்க வேண்டும்.

மூன்றாவது சிவபக்தர் திருவுருவம், காரைக்கால் அம்மையார் எனவும் காரைக்கால் பேய் எனவும் கூறப்படும் சிறந்த திருத் தொண்டர் திருவுருவமாகும். இவர் பேய் வடிவம் பெற்ற காரணத்தைச் சேக்கிழார் சுவாமிகள்,

'' ஆனவப் பொழுது மன்றுளாடுவா ரருளினாலே
மேனெறி யுணர்வு கூற வேண்டிற்றே பெறுவர் மெய்யல்
ஊனடை வனப்பை யெல்லா முதறியெற் புடம் பேயாகி
வானமு மண்ணு மெல்லாம் வணங்கு பேய் வடிவ மானார்.''

எனப் பக்தியுடன் பாடியருளியுள்ளார். காலை மடித்து வீற்றிருந்து தாளமிட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண்
வெண்பற் குழிவயிற்றுப்
பங்கிசிவந்திரு பற்கணீண்டு பரடுயர் நீள்கணைக்
காலோர் பெண்பேய்
தங்கி யலறி யலறு காட்டிற் ருழ்சடை யெட்டுத்
திசைகள்வீசி
அங்கங் குளிர்ந்தனலாடு மெங்களப்பன் இடந்திரு
வாலங்காடே."

எனச் செப்பரும் பெருமையன்பாற் றிகழ் திருவாலங்காட்டப்பனைப் பாடும் பாவனையில் அமர்ந்திருக்கும் **காரைக்காலம்மையார்** திருவுருவத்தைப் போன்று இலங்கையில் வேறெங்கும் இதுவரை வெளிவரவில்லை. பீடமில்லாதிருக்கும் இவ்வழகிய சிறு திருவுருவத்தின் உயரம் $10\frac{7}{8}$ அங்.

இரண்டு சிவா லிங்கங்கள் ஆவுடையாருடன் (ஒன்றின் ஆவுடையார் பின்னப்பட்டுள்ளது) உண்டு. ஒன்றின் உயரம் 3 அங். மற்றதன் உயரம் $2\frac{3}{4}$ அங். 10 ஆம் இலக்கத் தொகுதியில், கழுத்திலே மணி கட்டப்பெற்ற நந்திகேஸ்வரர் திருவுருவமும் காணப்பட்டது. இதன் உயரம் $1\frac{1}{8}$ அங். இரண்டு பூசை மணிகள் (கண்டு பிடிப்பு இலக்கம் 112 ம் 162 ம்) முறையே 10 அங். $12\frac{1}{2}$ அங். உயரமுள்ளன. இவற்றின் கைபிடியின் உச்சியில் திரிசூலம் காணப்படுகிறது.

**விஷ்ணு மூர்த்தங்கள்**

8. இத்தொகுதியில் விஷ்ணு மூர்த்தங்கள் பல வெளிவந்துள்ளன. விஷ்ணு கோயில்களின் விஷ்ணு (பெருமான்)வின் நின்ற, இருந்த, கிடந்த திருக்கோலங்களில் உள்ள மூர்த்தங்களில் ஏதாவதொன்று பிரதான மூர்த்தமாக இருக்கும். இவற்றை முறையே ஸ்தானக, ஆசன, சயன மூர்த்தங்கள் என வழங்குவர். இனி இக்கோலமூர்த்தங்கள் ஒவ்வொன்றிலும் யோக, போக, வீர, ஆபிசாரியக என நான்கு வகைகள் உண்டு. பத்மபீடத்தில் போக மூர்க்கத்தில் காணப்படும் விஷ்ணுவின் திருவுருவம் 4 ஆம் இலக்கமிடப்பட்டுள்ளது. திருவுருவத்தின் உயரம் 24 அங்குலம். பீடத்துடன் இதன் உயரம் $30\frac{1}{4}$ அங். இடது கரத்தில் இருக்கவேண்டிய கதாயுதம் காணப்படவில்லை.

கண்டெடுக்கப்பெற்ற திருவுருவங்களில் 14 ஆம் இலக்கம் இடப்பட்ட திருவுருவம் மேற்கூறிய மூர்த்தத்தைக் குறிப்பதாகும். இந்த விஷ்ணு திருவுருவத்தின் உயரம் $19\frac{1}{2}$ அங். இது மிகவும் குறுகிய $\frac{3}{4}$ அங். உயரமானதாகவுள்ள பீடத்தில் வைக்கப்பட்டுள்ளது. இடது பக்கத்து முன் கை கதாயுதத்தின் மீது படிந்திருக்கிறது. இதன் உடையலங்காரம் 4 ஆம் இலக்க விஷ்ணு உருவத்திலும் சிறிது வேறுபட்டது. இதன் கிரீடமும் ஆபரணங்களும் வேறுபட்ட வகையினவாகக் காணப்படுகின்றன.

ஒரு காலில் நடனமிடும் நர்த்தன பால கிருஷ்ண மூர்த்தியின் திருவுருவம், 10 ஆம் இலக்கத் தொகுதியில் காணப்பட்டது. இந்தச் சிறு திருவுருவத்தின் உயரம் $3\frac{7}{8}$ அங். பீடத்துடன் $4\frac{7}{16}$ அங். இதன்கண் அமைந்துள்ள ஜடாமகுடம், முகப்பட்டம், இதர திருநாவாபரணங்கள் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன.

10. விஷ்ணுவின் சுதர்சன சக்கரம் (கண்டு பிடிப்பு இல. 8), இத்தொகுதிக்குச் சேர்ந்ததாகும். இதன் மொத்த உயரம் $18\frac{3}{4}$ அங். இது சோடிச் சிங்கத்தின்மீது நிற்கின்ற பாவனையில் அமைந்துள்ளது.

**நான்முகன் (பிரமா) தொகுதி**

11. **கலைமகள்:** கண்டெடுக்கப்பட்ட திருவுருவங்களில் 1 ஆம் இலக்கமிடப்பட்ட திருவுருவம்—மகா பிரமாவின் தேவி சரஸ்வதி யென அடையாளங் கண்டு பிடிக்கப்பட்டது சரியாயிருக்குமாயின் ஒன்றுதான் இத்தொகுதியின் பிரதிநிதியாக விளங்குகின்றதெனலாம்.

" ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தினுள்ளே
இருப்ப ளிங்கு வாராதிடர்."

" படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரைபோற் கையுங்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லுஞ் சொல்லாதோ கவி."

சரஸ்வதி திருக்கரத்தில் கிளியொன்றுண்டு எனக் கிராசந்தேசய என்ற சிங்கள இலக்கியம் குறிப்பிடுகின்றது. சரஸ்வதியின் திருவுருவம் வேறு எவ்விடத்திலும் பிரசுரிக்கப்படவில்லை.

(31 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் மகாலிங்கசிவம்

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்**

*பாம்பின கால் பாம்பறியும் என்பது தமிழ் நாட்டுப் பழமொழி. வங்கத்துதித்த செங்கதிர்ச் செல்வமாகிய இரவீந்திரரைப் பாரத நாடு பாராட்டத் தொடங்கியதற்குக் காரணகர்த்தராயிருந்தவர் ஐரிஸ் கவிஞர் " ஈட்ஸ் " எனபவராவர். தாகூரின் கீதாஞ்சலியில் மண்டிக்கிடக்கும் இலக்கியச் சுவையின் நிழலை, ஆங்கில மொழி பெயர்ப்பில் கண்டமாத்திரத்திலேயே ஈட்ஸ் பெரிதும் அதிசயப்பட்டாராம்.*

*.........மோட்டாரிலும் டிராமிலும் இதை விடாது படித்து மகிழ்ந்திருக்கிறேன் என்று ஈட்ஸ் கூறுகிறார். ஈழநாடு ஒருவகையில் பாக்கியம் செய்த நாடென்றே கூறவேண்டும். கத்தரித் தோட்டத்து வெருளி பாடிய தங்கத் தாத்தாவையும் அவர் சிருட்டித்த காளை வாலைக் கிளப்பிக்கொண்டோடும் சொல்லோவியத்தையும், தமிழ் நாடெங்கணும் அறிமுகம் செய்துவைப்பதில் பேர்பெற்ற நம் பண்டிதமணி அவர்கள் இக்கட்டுரையில், " அந்தக் கவிதைகளை அந்த மடியோடு மடியும்படி விட்ட என் மடியைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் ? " எனக் கேள்விகேட்டு எங்கள் மடியையும் சுட்டாமற் சுட்டிக் காட்டுகிறார். இத்தகைய இலக்கியவழியைப் பண்டித மணி ஒருவர்தான் வகுத்துக்காட்ட முடியும்.*

*ஆசிரியர்.*

**கவிசமயம்** என்று ஒரு சமயஞ் சொல்லுவார்கள். அந்தச் சமயம் சைவசமயம் முதலிய சமய வகைகளைச் சேராது. கவிஞன் ஒருவன் ஓர் உணர்ச்சி கைவந்தபிறகு அதன் பரிபக்குவ பருவம்நோக்கி நன்றாகக் கனிந்துவிட்டது என்று கண்டபொழுது, எற்ற சந்தர்ப்பங்கள் பாத்திரங்களை நாடி, அதனை இன்னும் இன்னும் பொறாது, பொறுக்க முடியாது, கருவுயிர்த்தற்குச் சொல்லுருவத்திற் கண்டு களித்தற்கு முகஞ்செய்கின்றான். அம்முகத்திற்குத்தான் கவிசமயம் என்று பெயர். அப்படி ஒரு சமயம் மகாலிங்கசிவத்துக்கு இல்லை. எந்தச் சமயமும் அந்தக் கவிஞருக்குக் கவிசமயமே. இருடிகருப்பத்துக்கு " இனி " என்ற வார்த்தை இல்லை. மகாலிங்கசிவத்துக்கும் " பிறகு " என்ற பேச்சில்லை.

### கணேசையர் அறுபதாண்டு நிறைவு விழா

**மகாவித்துவான் கணேசையர் அவர்களின் சஷ்டியப்த பூர்த்திவிழா வெகு விமரிசையாக வண்ணை வைத்தீசுவர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறுகின்றது.** பெரிய பெரிய பிரமுகர்கள் பேச்சுக்கு வந்திருக்கிறார்கள். பாரிய கூட்டம் அது. **மகாலிங்கசிவமும்** மேடையின் ஒரு புறத்தில் ஒருவித ஆடம்பரமுமின்றி ஒதுங்கி இருக்கின்றார். சங்கங்கள், சபைகள், மகாநாடுகள் தத்தம் மரியாதையையும் நன்றியையுந் தெரிவிக்கு முகமாகப் பணமுடிப்புக்களையும், கோலாகலமான உபசாரபத்திரங்களையும் அனுப்பியிருக்கின்றன. பத்திரங்களிலே கவிதைகளில் அமைந்தவை பல ; வசனநடையில் வந்தவை சில.

ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், தனது நன்றியைக் கவிதை நடையில் அமைத்து, வேண்டிய வெளி அழகுகள் செய்து ஒப்பிக்கும் பொறுப்பைப் பலவாரங்களுக்கு முந்தியே மகாலிங்கசிவத்திடம் ஒப்பித்திருந்தது. ஒப்பிக்கும்போதே " இது கட்டாயம் நடக்குந்தான் ; நடக்கக்கூடியதுதான் ", என்று என் மனசுக்குட் சிரித்துக்கொண்டேன். கூடிச் சிரிக்கிறதற்கு அப்பொழுது அந்தச் சங்கத்திற் பொருத்தமான ஆள் இல்லை. எழுதுகோலுங் காகிதமும் எடுத்துக்கொண்டுபோய்ச் " சொல்லுங்கள், எழுதுகிறோம் " என்றாற் கவி சொல்லுகிற ஒருவர், கவிபாடி அதன்மேற் செய்யவேண்டியன செய்து, குறிப்பிட்ட விழாவுக்குக் கொண்டுவந்து, ஒப்பிக்கிற வேலையை எற்றுக்கொண்டால், " அவர் எற்றுக்கொண்டார் " என்று அந்தச் சங்கம் நம்பிக்கொண்டால், அதனைப்பார்த்துச் சிரியாமல் வேறு என்ன செய்யமுடியும் ! மகாலிங்கசிவந் தாமே அப்பொழுது ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்துக்கு உபகாரியதரிசியாயுமிருந்தார். அவரைத் தூண்டுவார் தீண்டுவார் யாருமில்லை. பிரதம வித்தியாதரிசியாயிருந்த **பிரம்மஸ்ரீ தி. சதாசிவ ஐயர்** அவர்கள் மகாலிங்கசிவம் எந்த உலகத்திற் சஞ்சாரஞ் செய்கிறவர் என்பதை நன்கு அநுபவித்தறிந்தவர்கள். அவர்களும் அப்பொழுது சங்கத்தில் இல்லை. அடுத்த நாளே, மகாலிங்க சிவம், அன்று அச்சங்கத்தில் நடந்த நடைமுறைகள் அத்தனையும் மறந்துபோனார். சஷ்டியப்த பூர்த்திவிழாவுக்கு மாத்திரம் எப்படியோ வந்து சேர்ந்துவிட்டார். அங்கே நடப்பவைகளை வெகு நிம்மதியாகப்பார்த்து அநுபவித்துக்கொண்டிருக்கின்றார்.

ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கக் காரியதரிசியும் பிறரும் மேற்படி சங்கஞ் சமர்ப்பிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபசாரப் பத்திரத்தைத் தேடுகின்றார்கள். "வந்திருக்குமே" என்று விசாரிக்கின்றார்கள். "மகாலிங்கசிவம் கொண்டுவந்திருப்பார்; வைத்திருப்பார்" என்ற பேச்சும் நடக்கின்றது. இனியும் சகிப்பது சரியன்று என்று எனக்குத் தோன்றியது.

மகாலிங்கசிவத்துக்குப் பக்கத்தே மெல்லப்போய், "ஏதும் பாட்டுக் கொண்டுவந்திருக்கிறீர்களா? சங்கச் சார்பில், உபசாரப் பத்திரப் பொறுப்பை நீங்கள் தாமே ஏற்றுக்கொண்டீர்கள்" என்று ஞாபகஞ் செய்தேன். அவர் "அப்படியா!" என்று விழித்துத் தலையை மெல்லத் தடவிக்கொண்டு, ஒருமுறை கொட்டாவி விட்டார். "எழுதுகோலுங் காகிதமுங் கொண்டு வரவா?" என்று கேட்டேன். அவர் அதற்குடன்பட்டுக் கொண்டு, வித்தியாலயக் கட்டடத்துக்குப் பின்புறமாக, வடக்குப் பக்கத்தில் உள்ள தமிழ்ப் பள்ளிக்கூடத்துக்குச் சென்று சேர்ந்தார். எழுதுகோலையுங் காகிதத்தையும் அவர் முன்னிலையில் வைத்தேன். ஒரு சில நிமிஷங்களிற் சில பாட்டுக்கள் எழுதிமுடித்தார். முடித்தபிறகு எழுதிய காகிதத்தைப் பலமுறை மடித்தார். மடித்த தன்மேல் அந்த மடிப்பைத் தமது மடியுள் வைத்துக் கொண்டார். பழையபடி மேடைக்கு வந்து விட்டார்.

பலவகையான பத்திரங்கள்—பல்வேறு வர்ணங்களிற் கொடிசெடி வேலை செய்யப்பட்டவைகள்—பல்வேறு சங்கங்களின் சார்பிற் படிக்கக்கூடியவர்களாற் படிக்கப்பட்டுத் தலைவர் அவர்கள் மூலம் மகாவித்துவான் ஐயரவர்களிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. அவற்றையெல்லாம் உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கின்றார் மகாலிங்கசிவம்.

ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் முறை வந்தது. மகாலிங்கசிவம் எழுந்தார். எழுந்து போர்வையை மெல்ல நீக்கி, மடியைப் பரிசீலனை செய்து பல மடிப்புக்களோடு கூடிய காகிதத்தைக் கண்டு பிடித்து, வெளியிலே எடுத்து, ஆறுதலாக மடிப்புக்களை விரிக்கத் தொடங்கினார். புதியதொரு குதூகலஞ் சபையிலே திரையெறிந்தது.

மகாலிங்கசிவம் சபையை நோக்கினார். சில வசனங்கள் சொல்லிவிட்டுப் பாடல்களைப் படிக்கத் தொடங்கினார். நிசப்தம் குடிகொண்டது. பாடல்களைப் படித்துப் படித்து வியாக்கியானமுஞ் செய்தார். கண்கள் எல்லாம் அவரையே நோக்கின. காதுகளெல்லாம் அவர் வாயிலிருந்து வரும் ஒவ்வோர் எழுத்துக்கும் பாத்திரமாயின. முந்திய பத்திரங்கள் அழகிய ஆணித்தரமான வேலைப்பாடுகள் நிறைந்தவைகள், மறவியில் மறைந்துபோயின. "அழகினுக் கழகு செய்வார் யாவரே" என்ற முடிபுக்கு யாவரும் வந்தார்கள். விழா நிறை வெய்தியது; பரிபூரணமானது.

சம்பிரதாயத்துக்கு மாறுகப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டிய இடத்திற் சமர்ப்பிக்காமற் பழையபடி மடித்துத் தமது மடிக்குள்ளேயே பத்திரப் படுத்திக் கொண்டார் மகாலிங்கசிவம். மாதிரிகைக்காக, அப்பத்திரத்திலுள்ள பாடல்களில் எத்தனையோபேரை வசீகரித்த அந்தக் கவிதைகளில் ஒன்று சொல்லும்படி ஒருவர் கேட்டால், இன்றைக்கும் அந்த மகாலிங்கசிவத்தின் மடியை நினைந்து விழி விழிக்க வேண்டியிருக்கின்றது!

அந்தக் கவிதைகளை அந்த மடியோடு மடியும்படி விட்ட என் மடியைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்! இது நிற்க, இதற்கொரு கழுவாயாக மற்றொரு சிறு சந்தர்ப்பத்தை நோக்குவோம்.

* * *

மகாலிங்கசிவம் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிற் படிப்பித்தபோது, ஆசிரிய மாணவர் ஒருவர் படிப்பித்தற் பரீட்சையிற் படிப்பித்துவென்றி எய்தும்பொருட்டு, இதுவரை அங்கே படிப்பியாததும், புதியதுமான இலக்கியச் செய்யுள் ஒன்று சொல்லும்படி கேட்டார். உடனே மகாலிங்கசிவம் தாமே இயற்றி ஒரு செய்யுள் சொன்னார். அச்செய்யுள் இது:

மங்கையிவள் செலும்வழியில் நறுந்தருக்கள்
  நிழல்செய்து மலிக மற்றும்
பொங்குமணல் தாமரையின் பொலந்தாது
  போற்பொலிக புனித வாவி
எங்குமலர்ந் திலங்கிடுக மந்தமா
  ருதம்வீச இனிய தோகை
யுங்குயிலுந் துணையாக அறுதொடர்க்கண்
  உகரம்போல் உறுக தூரம்.

ஆச்சிரமத்திலிருந்து கணவன் வீட்டுக்குச் செல்ல விடைவேண்டி நின்ற சகுந்தலையைத் தந்தையாகிய கண்ணுவர் ஆசீர்வதித்து வழியனுப்புகின்றார். இச்சந்தர்ப்பஞ் சாகுந்தல நாடகத்தில் மிகப் பிரசித்தியானது; காளிதாச மகா கவியின் காவியரசம் ஒழுகி வழிவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" **மங்கையிவள்** " என்ற கவி, சந்தர்ப்பத்தை மனத்தில் இருத்திக் கொண்டியற்றியது ; மொழி பெயர்ப்பன்று ; ஆசுகவி. பாட்டின் இறுதியிலே **' அறு தொடர்க்கண் உகரம்போ லுறுகதூரம் '** என்பது **சொந்தக் கற்பனை.**

கணவன் பிரிவால் நீண்டு நடக்கிற வழியைச் சகுந்தலைக்குச் சோர்வு பிறவாத பிரகாரம் கண்ணுவர்மூலம் அழகு செய்தமைக்கின்ருன் காளிதாச மகாகவி. **காளிதாசன் வழி அழகு செய்யும் போது அஃது எத்துணை நீண்ட வழியும் அளபெடையாகாதே என்று சங்கநாதஞ் செய்கின்றது மகாலிங்கசிவத்தின் குற்றியலுகரக் கற்பனை.**

---

**குறிப்பு.**

வ : சஷ்டியப்த பூர்த்தி விழா. அறுபதாம் ஆண்டு நிறைவு விழா.

செ : " மங்கையிவள் ": மங்கை என்றது சகுந்தலையை. பொங்கு மணல்,— உஷ்ணத்தால் விரிந்து பொங்கும் மணல். பொலந் தாது-பொன்மயமான மகரந்தம். மந்தமாருதம்-இளந் தென்றல். வீச-வீசுக. அநுகூலமாக வீசுக என்றவாறு வன்ருெடர்க்க ணுகரம்-வன்ருெடர் முதலிய அறுவகைக் குற்றுகரம்.

இ : i மகாலிங்கசிவம் சும்மா இருப்பார். உள்ளக் கிளர்ச்சி உண்டாகுஞ் சந்தர்ப்பத்திற் கவிதை மழை பொழிந்து விடுவார். அவ்வாறே கவிதை நயம் உபநியாசம் என்பவைகளும் நடக்கும். அவர் ஒரு சபையில் ஒருவர் செய்யுஞ் சொற்பொழிவைக் கேட்டுக்கொண்டிருப்பாராயின் அச் சமயத்தில் ஒரு குறிப்புரை நிகழ்த்த வேண்டு மென்று கேட்டால், அவர் குறிப்புரையே தலைசிறந்ததாய்ச் சபையை வசீகரிப்பதாயிருக்கும்.

ii " ரம்யாந்தரஹ் கமலினி ஹரிதைஹி ஸரோபிச
சாயாத்ருமைர் நியமிதார்க்க மயூக தாபஹ
பூயாத் குசேசய ரஜோமிருது ரேணு ரஸ்யாஹா
சாந்தாநுகூல பவநச்ச சிவச்ச பந்தாஹா.

இது சாகுந்தலத்திற் கண்ணுவர் வாழ்த்தாய் வருஞ் சுலோகம்.

" தாமரையின் பச்சைகளுடைய குளங்களால் ரம்மியமான நடுப்பாகத்தையுடையதும், நிழல்மரங்களால் அடக்கப்பட்ட சூரியனுடைய கிரண வெப்பத்தையுடையதும், தாமரையின் தாதுக்களால் மிருதுவான புழுதியையுடையதுமாகிய சகுந்தலை செல்லும் வழி, சாந்தமாயும் அநுகூலமாயும் உள்ள காற்றையும் மங்களத்தையும் உடையதாகுக "

என்பது இதன் கருத்து.

சகுந்தலை செல்லும் வழி என்று எடுத்துக்கொண்டு, ஏனையவைகள் அனைத்தையும் வாழ்த்தாக உரை கூறுவதும் உண்டு.

இதனை முதன் முதல் தமிழிற் பெயர்த்துச் செய்யுள் செய்தவர் **மறைமலையடிகள்** என்னுஞ் **சுவாமி வேதாசலம்.** செய்யுள் இது :

**வழியி லிடையிடையே கொழுந்தா மரைபொதுளி**
**வளஞ்சால் தடங்கள் வயங்கிடுக**
**அழிவெங் கதிர்வருத்தம் அடர்ந்த நிழன்மரங்கள்**
**அகற்றி மகிழ்ச்சி அளித்திடுக**
**கழிய மலர்த்துகள்போற் கழுமு புழுதியடி**
**கலங்கா தினிதாய்க் கலந்திடுக**
**செழிய மலயவழி திகழ வுலவிடுக**
**திருவே யனையாள் செலுநெறியே.**

மகாவித்துவான் **ரா. ராகவையங்காரும்** குறித்த சுலோகத்தை மொழிபெயர்த்துச் செய்யுள் செய்திருக்கின்ருர். அச் செய்யுள் இது :

**புனல்வண் கமலமொ டொளிருந் தடமிரு**
**புறமல் கிடைவெளி மகிழ்வார்க**
**பொழிலின் தருநிரை பகல்வெய் யவன்வெயில்**
**புதிதின் குளிர்செய நிழல் கூர்க**
**வனசந் தருதுகள் நிகரும் படிநில**
**மணல்மெல் லெனவலி திலதாக**
**வளிமென் மையினுடன் வரநன் றியல்தர**
**வழிநன் சுபமுட னினிதாயே.**

இச்செய்யுள்களையும் **மகாலிங்கசிவம்** மொழி பெயர்க்காமலியற்றிய செய்யுளையும் முதனூற் சுலோகத்தோடொப்பிட்டு ஒற்றுமை வேற்றுமை கண்டிரசிக்க.

**iii. ' கத்தரித் தோட்டத்து வெருளி ' யிலே ஒரு கானவாலைக் கிளப்பிக்கொண்டோடுது. ' மங்கையிவள் ' என்ற பாட்டில், ' அறுதொடர்க்க ணுகரம்போ லுறுக தூரம் ' என்ற கற்பனை வாலைக் கிளப்புமாறு காண்க.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமாதிபுத்தர் திருவுருவத்தினை வழிபடுகிருர் பிரதமர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவீந்திரநாத் தாகூர்

## பாரதப் பண்பாட்டினைப் பாரெங்கும் பரப்பிய பாவாணர்

தோற்றம்—6.5.1861 மறைவு—7.8.1941.

செல்வி ச. நித்தியகல்யாணி

### தோற்றுவாய்

பாரத மாதாவின் அடிமைத் தளையைத் தகர்த்தெறிந்து சுதந்திர சூரியன் சுடர்விட்டொளிரச்செய்த காந்தியடிகளைத் தவிர்த்து, மிகப் புகழ் பெற்ற இந்தியர் இரவீந்திரநாத் தாகூர் என்பதற்கையமில்லை. உலகெங்கணும் உள்ள அறிஞர் இந்த மகா கவியை நன்கறிந்திருந்தனர். இரவீந்திரர் அவதரித்த பாரதநாட்டில் பழங்கால ரிஷிகளுக்கொப்பான ஒரு கவியெனவும், தத்துவஞானியெனவும் புகழ்ந்து பாராட்டப்பெற்ருர். பூவுலக மக்கள் இவருக்குச் செலுத்திய அஞ்சலியை கீசெர்லிங் என்பவர் காட்டிய சொல்லோவியம் இவருடைய பெருஞ் சிறப்பை நன்கெடுத்துக் காட்டுகிறது. "யான் அறிந்தவர்களுள் என்றுமே கண்டிராத, யாண்டும் வியாபமாகி யாவரையும் அணைத்து நிற்கும், பூரண மனிதன்" என்று இரவீந்திரரை வியந்து பாராட்டினுர்.

வங்காளத்தின் முதன்மையான குடும்பங்களுள் தாகூர் குடும்பமும் ஒன்ருகும். இவர்கள் பரம்பரை ஜமீன்தார்களாக மட்டுமல்லாது, கலையையும் இலக்கியத்தையும் ஊக்குவிக்கும் வள்ளல்களாகவும் இருந்தது. பனோர்ஜிஸ் என்று முன்னர் அழைக்கப்பட்ட இவர்கள், கி.பி. எட்டாம் நூற்ருண்டளவில், மேற்கு வங்காளத்தில் குடியேறியிருக்க வேண்டும் என நம்பப்படுகின்றது. பதினேழாம் நூற்ருண்டில், இக் குடும்பத்தினர், "வணக்கத்திற்குரிய பிரபு" எனக் கருத்துடைய "தக்கூர்" எனும் பெயர் பெற்றனர். இதுவே பின்னர், "தாகூர்" என மருவி வழங்கப்படலாயிற்று.

வங்காளத்திலே சமூக, பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றினர் தாகூர் குடும்பத்தினர். இரவீந்திரநாத் தாகூரின் தகப்பனுர் தேவேந்திரநாத்தும், பாட்டனுர் துவாரகாந்தும் பிரம்ம சமாஜத்தின் பிரமுகர்களாக இருந்தனர். இராஜா இராம்மோகன் ரோயால் தாபிக்கப்பட்டு, அத்வைதத்தைப் போதித்த இந்த சமாஜம், பெரும்பாலான இந்துக்கள் அனுட்டித்த, விக்கிரக ஆராதனையையும் கிரியை முறைகளையும் எதிர்த்தது. வைதீக முறைகளை எதிர்ப்பது தாகூர் குடும்பத்தினர்க்கே உரித்தான தொன்ருக இருந்ததெனலாம். தேவேந்திரநாத் தாகூரும் துவாரகநாத் தாகூரும் சலியாதும் சலிப்பின்றி உழையாதிருப்பின் பாரத நாட்டு மக்களின் இன்றைய வாழ்வில் பிரம்மசமாசம் இவ்வளவு தூரம் செல்வாக்குப் பெற்றிருக்குமோ என்பது சந்தேகமே. முஸ்லிம்களுடன் சமபந்தியில் உணவருந்தினர். பிராமணர் கடற்பிரயாணம் செய்யக்கூடாதென்ற நெடுங்கால விதியைத் தகர்த்தெறிந்து இங்கிலாந்துக்குக் கடல் கடந்து முதன் முதலில் சென்றவர்களுள் ஒருவரே துவாரகநாத். இருந்தும் கவியின் தகப்பனுராகிய தேவேந்திரநாத்துக்கு "மகரிஷி" எனும் பட்டத்தை அளித்தனர் நாட்டு மக்கள்.

இரவீந்திரநாத் மட்டுமல்ல, இத் தாகூர் குடும்பமே நாட்டுக்குப் பல நன்மக்களை ஈந்துள்ளது. கவிஞரின் தகப்பனுர் சிறந்த சுயசரிதம் எழுதியுள்ளார். கவியின் மூத்த சகோதரர் துவிஞ்ஜேந்திர நாத் ஒரு தத்துவ ஞானி—தலை சிறந்த கட்டுரையாளர், இன்னெரு சகோதரரான ஜோதி இந்திரா ஓர் ஓவியக் கலா நிபுணர்; மூன்ருவது சகோதரர் சிவில் சேவையில் புகுந்த முதல் இந்தியராவர். கவியின் மருகரான அபனிந்திரநாத்தும், ககானிந்திரநாத்தும் சர்வதேசப் புகழ் பெற்ற கவின் கலைஞர்கள்; பாரத நாட்டில் ஓவியக் கலை வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தது வாழையடி வாழையாக வந்த தாகூர் திருக்கூட்டம்.

### பிறப்பு

கல்கத்தாவிலே ஜோரஸன் கோவில், ஒரு மாளிகையில் 1861 ம் வருடம் மே 6 ம் திகதி பூவுலகில் தோன்றினுர் இரவீந்திரநாத். மாளிகையே ஒரு தனியுலகமெனலாம். எனினும் இரவீந்திரநாத்தின் இளமைப்பருவம் அவ்வளவு மகிழ்ச்சி நிறைந்ததாய் இருக்கவில்லை. சிறு வயதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கவியரசர் தாகூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயை இழந்தார். தகப்பனுரோ கண்ணுக்கும் மனத்துக்கும் எட்டாதவராய் இருந்தார். இதனுல் நம்பிக்கையான வேலேக்காரர்களின் ஆதரவிலும் அன்பிலும் வளர்ந்தார் கவியரசர் தாகூர்.

**இளமைப்பருவம்**

பள்ளிக்கூடம் சென்று படிப்பதை இவர் ஆரம்பம் தொட்டே முற்றிலும் வெறுத்தார். முதலில் வங்காள அக்கடமிக்கும் பின் செண்ட் ஸேவியர் பாடசாலேக்கும் படிக்க அனுப்பப்பட்டும் இவர் செய்த ஆர்ப்பாட்டங்களின் பயனுக வீட்டில் கல்வி பயில்வதற்கான ஒழுங்குகள் செய்யப் பட்டன. ஆனுல் இங்கும் பலன் கிடைக்க வில்லே. இதையும் இவர் வெறுத்தார். இவரது மனமானது கற்பனே உலகில் சஞ்சரிக்கத் தொடங்கியது. சுயேச்சையாகவும் சுதந்திரமாகவும் கரைபுரண்டோடும் நதிபோன்று காணப்பட்டது, இவரின் உள்ளம்.

கவியின் தகப்பனுர் அடிக்கடி பிரயாணம் செய்யும்பொழுது தனது மகனேயும் கூடவே அழைத்துச் சென்ருர். இரவீந்திரநாத் சில காலம் கல்கத்தாவைச் சுற்றியுள்ள கிராமங்களில் தங்கி வங்காளக் கிராம மக்களேயும் ரம்மியமான வயல்களேயும் அசைந்தாடும் பாய்மரங்களேயும் கண்டார். இந்தியாவின் வடமேற்றிசை நாடு களில் பிரயாணம் செய்கையில் பழமை பொருந்திய இந்தியாவின் பல்வேறு காட்சிகளேக் கண்டும் ஒலிகளேக் கேட்டும் மனம் திளேத்தார். கங்கை நதியின் வளங்கள் தொடக்கம் மேற்றிசை எல்லேப் புற நாட்டு வளம் வரை கண்டு களித்தார்.

**இலண்டன் செலவு**

1877 ல் இங்கிலாந்துக்கு முதன் முதலாக விஜயம் செய்த இரவீந்திரர், ஆரம்பத்தில் பிரைட்டன் பாட சாலேயிலும் பின்னர் லண்டன் சர்வகலாசாலேக் கல்லூரியிலும் சேர்ந்து படித்தார். ஒருவருடம் கழித்து இந்தியா திரும்பிய இவர் இங்கிலாந் தைப் பற்றி நல்லபிப்பிராயத்தைக் கொண் டிருக்கவில்லே. பிரயாணங்கள் இவரது எழுத்து வன்மையைச் சிறிதும் பாதிக்கவில்லே. குறுகுறு நடந்து தத்தித்தத்தி அடிஎடுத்து வைக்கும் பிள் ளேப் பிராயத்திலேயே கவி புனேய ஆரம்பித்து விட்டார் நம் பெருங்கவி. பதினேந்தாம் பிராயத் தில் இவரது கவிகள் பிரசுரமாயின. பதி னெட்டாம் வயதிற்கு முன் ஏழாயிரம் வரிகள் கொண்ட கவிகளும், வசனங்களும் வெளியிட்ட பெருமை இவரையே சாரும். பானு சிங் கவி (முதன் முதலாக 1877 ல் ஆண்டு பாரதியில் பிரசுரிக்கப் பட்டவை) தொகுதியில் இரவீந்திரநாத், பழம் பெரும் வைஷ்ணவ புலவர்களின் கவிகளில் அடங்கிய விஷயங்களேயும், பண்களேயும் மிக வெற்றிகர மாகப் புகுத்தினுர். இவரை அறியாத பல அறிவாளிகள் இக்கவிகளேத் தம் வங்காள இலக்கியத்தில் கண்டு பிடிக்கப்பட்ட சிறந்த கருவூலமெனப் புகழ்ந்தனர். ஆனுல் இரவீந்திரர் இந்த இளமைப் பருவக் கவிகளுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லே என்பது இவர் 1896 ல் வெளியிட்ட முதல் கவிதைத் தொகுதியி லிருந்து நன்கு புலனுகின்றது.

**ஞாபகங்கள்**

கவிகள் புனேவதை விட உரைநடையிலும் இவர் சிறந்து விளங்கினுர். 1878 ல் இவர் தமைய ஞர் வெளியிட்ட "பாரதி" எனும் பத்திரிகையில் பல கட்டுரைகளே வரைந்திருக்கின்ருர். "வங்காளி களின் நம்பிக்கையும் சஞ்சலமும்" என்ற கட்டுரையில் எடுத்தாளப்பட்ட நோக்கங்கள் கவி யின் எதிர்கால வாழ்வில் ஒரு முக்கிய பங் கெடுத்தது. இருபதாம் வயதில் இரவீந்திரநாத் யோகிகளின் காட்சிக்கு புலனுகும் சோதியை காணக் கூடியதாக இருந்தது. இத்தகைய அநு பூதி இவர் உள்ளத்தில் வேரூன்றியது. "ஒரு நாட் காலே நான் வீட்டு முன்புறத்தில் நிற்கையில் அருணன், மரங்களினூடே மேலெழும்பக் கண் டேன். நான் அதையே சிறிது நேரம் உற்றுப் பார்க்கும் போது எனது கண்களிலிருந்து ஒரு திரை நீங்குவது போல் இருந்தது. இந்தக் கற்பனே கடந்த ஜோதியில் உலகம் முழுவதுமே திளேத்தெழுந்தது போன்று இருந்தது. எங்கும் பொங்கும் மகிழ்ச்சி; யாண்டும் அழகின் அலேகள். எனது இதயக்குகையில் இதுவரை மண்டிக் கிடந்த துயரக் காரிருளேக் கணப்பொழுதில் ஊடுருவிச் சென்று இதயம் முழுவதிலும் பிரகா சிக்கத்தொடங்கியது," என்று இரவீந்திரர் ஒரு சம்பவத்தைத் தாம் எழுதிய "எனது ஞாபகங் கள்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

"மாலேக் கீதங்கள்" கவியின் முன்னேற்றப் பாதையில் ஒரு மைல் கல்லாக விளங்குகின்றன. அதன் பின்னர் எழுதப்பட்ட "காலேக் கீதங்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவீந்திரர் சமீபத்தில் கண்ட ஜோதிக் காட்சியை பிரதிபலித்துக் காட்டும் வகையில் அதாவது அகச் சுதந்திரத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. “இயற்கையின் பழி” இவரது முதலாவது முக்கிய நாடகமாகும். ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதி தன் ஊடகத்தே புகுந்து நிரம்பி வழிந்த அளப்பரும் காட்சியைப் பிரபலித்துக்காட்டுவது இந்த நாடகம். இதன் பின்னரும் இவர் பல நாடகங்களையும், கவிகளையும் எழுதியிருப்பினும், “படத்திலும் பாட்டிலும் இரகுவின் காதல்” என்ற கவியே சிறந்த சிருட்டியாகச் சிலர் கருதுகின்றனர். இவை யாவும் அனுபவப் படிகளாகவே கருதப்படுகின்றன.

### திருமணம்

இரவீந்திரர் மிருணாளினிதேவியை தம் இல்லக் கிளத்தியாக 1883 டிசம்பரில் தெரிந்தெடுத்தார். இம்மாதர் திலகத்தின் இயற்பெயர் பவதாரிணி என்பது. கவீந்திர இரவியாகிய கதிரவனுக்கு தண்டாமரையில் அதிக விருப்பமல்லவா? அதனைக் கவிகள் எவ்வாறெல்லாம் உவமானங்களில் பயன்படுத்தி இருக்கின்றனர்; எனவே இரவீந்திரர் தமது மனைவியின் பெயரை தாமரை எனப் பொருள்படும் **மிருணாளினி** என மாற்றியமைத்ததில் வியப்பொன்றுமில்லை.

வெகுவிரைவில் இரவீந்திரர் இளம் இலக்கிய எழுத்தாளரிடையே “வங்காள ஷெல்லி” எனும் பட்டப்பெயரைப் பெற்று “பாலிகா” எனும் ஆண் பிள்ளைகளுக்கான பத்திரிகையிலும் எழுதி வந்தார். வங்காளக் கல்வியாளரிடையே நீண்ட, சுருண்ட மயிரையும் அழகிய தாடியையும் வைத்திருக்கும் முறையைப் புகுத்தியவர், இவரே தான். அடுத்தடுத்து இவர் வாழ்க்கையில் ஏற்பட்ட மரணங்களால் மனமுடைந்த இரவீந்திரர் தம் கவிகளினும் காலன் வருகையைப் புகுத்தியுள்ளார். 1887 ல் ஐக்கிய மாகாணங்களில் இருக்கும் கசிப்பூருக்குச் சென்று சிந்தனையில் ஈடுபட்டார். இங்கு எழுதப்பட்ட “மானசியில்” கோபமும் வெஞ்சொற்களும் நிறைந்திருந்தன. இங்கு மன அமைதியைப் பெறமுடியாமல் இரவீந்திரர் கங்கைக்கருகில் இருந்த ஷிலிடாவுக்குச் சென்றார். தமது வாழ்நாளிலேயே மிக அமைதியான மிகச் சந்தோஷமான வருடங்களை கவி இங்குதான் கழித்தார். சாதாரண மக்களுடன் பழகி மனித சமுதாய வாழ்வையும் இந்தியாவின் பிரச்னைகளையும் நேரடியாகக் கண்டறிந்தார். வங்காள மாதாவின் மேல் காதல் கொண்ட இரவீந்திரரின் மனம் இங்குதான் பரந்து விரியத் தொடங்கிற்று.

“சாதனா” எனும் சஞ்சிகைக்கு இவர் நான்கு வருடங்கள் இடைவிடாது கட்டுரைகளையும், சிறு கதைகளையும், கவிகளையும் எழுதிக் கொண்டே வந்தார். இத்துடன் நாடகாசிரியர் வரிசையில் முதன்மை இடம் பெறுவதற்கேற்ற ஆற்றலை வெளிப்படுத்தத் தொடங்கினார். “தியாகம்” வங்காள இலக்கியத்தின் மாபெரும் நாடகமாகும். “சித்திராங்கதா” தன்னிகரற்று விளங்குகின்றது. இசையோடொத்த பாடல்கள் தொகுப்பதிலும் இவர் சிறப்புற்று விளங்கினார். “சித்ரா” எனும் தொகுப்பில் அழகுத் தெய்வத்தைத் தன் இருதயக் கோயிலில் இருத்தி அதனை ரசித்த முறையை விபரிக்கின்றார். “ஊர்வசி” வங்காள இசைக் கவிகளின் சிகரத்தைத் தொட்டதெனலாம். அழகினைப் பூஜிக்கும் கவி இதைப் போன்று உலகில் வேறெங்கணும் காணமுடியாது.

இந்தக் காலத்தின்போதுதான் இவரது வாழ்க்கையில் ஓர் புதிய திருப்பம் ஏற்பட்டது. இந்தியாவின் மற்றைப் பாகங்கள் போன்று வங்காளத்திலும் தேசிய உணர்ச்சி ஊற்றெடுத்த காலமது. முதலில் இரவீந்திரநாத் அரசியலில் தலையிடாமல் இருந்தாலும் அன்னியர் ஆட்சியின் மேல் ஏற்பட்ட வெறுப்பு கூடிக்கொண்டே வந்தது. இறுதியில் அரசியலில் இறங்கி இந்தியப் புத்துணர்ச்சியின் தலைவரானார். அன்னிய ஆட்சியை இவர் எவ்வளவு வெறுத்தாரோ அதே போன்று அக்கால இந்திய அரசியல் தலைவர்களின் அடிமை மனப்பான்மையையும் எதிர்த்தார். பிரிட்டிஷ் ஆட்சியைக் குறை கூறுவதை நிறுத்திவிட்டு இந்தியா முன்னேற வேண்டுமானால் அரசியல் வாதிகள் கல்வி சமூக சீர்திருத்தங்களில் ஈடுபட்டு உழைக்க வேண்டுமென வற்புறுத்தினார். இந்தியாவின் பழம்பெரும் பெருமையை தன்நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டி இந்தியா எங்கணும் சொற்பொழிவாற்றினார். ஆனால் இவை யாவற்றிலும் பார்க்க அவர் உள்ளத்தைக் கவர்ந்தது **சாந்திநிகேதனம்** தான். உலகப் பிரசித்திபெற்ற இப்பாடசாலை போல்பூரிலிருந்து இரண்டு மைல்களுக்கப்பால் 1901 ம் வருடம் தாபிக்கப்பட்டது. மகரிஷி இரவீந்திரநாத், இயற்கை அன்னையுடன் கொஞ்சிக்குலாவ இங்குதான் ஆவலுடன் ஓடிவருவார். பழங்கால இந்தியாவின் சிந்தனையூட்டும் அமைதியுடைத்தான இடம். வியாபகமாகி நிற்கும் அழகையும் கடவுளையும் கைகொடுத்து அணைக்கும் இடம். மேற்கின் பல சிறந்த கல்வி முறைகள் சாந்திநிகேதனில் கையாளப்பட்டன. சில வருடங்களுக்குள்ளாகவே இப் பள்ளிக்கூடம் தலை சிறந்த நிலையமாக விளங்கிற்று. பல பிரபல அறிஞர்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்களும் இங்கு பல்காலம் சேவை புரிந்தனர். இதற்கடுத்த சில வருடங்கள், இரவீந்திரநாத்தின் வாழ்க்கையில் மறக்கமுடியாதவை.

#### மனைவியின் பிரிவு

அவரது மனைவியார் 1902 ல் காலமானார். இரண்டாம் புத்திரி 1904 ல் மரணத்தைத் தழுவினார். அடுத்த ஆண்டு தந்தையார் இறைவனடி சேர்ந்தார். இரண்டு வருடம் கழித்து அவரது மூத்த மகனை இழந்தார். இவையாவும், இவர் எழுதிய "ஸ்மரன்", "கெயர்" ஆகிய கவிகளில் துக்கப் பாமாலையாகத் தொகுத்து நிற்கின்றன. இந்தக் காலத்தில்தான் "கோரா" உட்பட இவர் பல நாவல்களையும் வரைந்தார். அரசியலில் உள்ள சூதுவாதுகளைக் கண்டு மனம் முறிந்து இரவீந்திரர் மீண்டும் சாந்திநிகேதனை நாடினார். இங்கு மாணவர்களுக்கு சமயத்தையும் மன அமைதி பெற வேண்டிய அவசியத்தையும் போதித்து வந்தார். "இலையுதிர் கால விழா", "இருட்டறை அரசன்", "தபால் ஆபீஸ்" ஆகிய நாடகங்களையும் எழுதினார். கீதாஞ்சலியையும் எழுத்தில் புனைந்தார்.

#### கீதாஞ்சலி

கீதாஞ்சலி தெளிவாகப் புனையப்பட்ட ஒரு கவிதை. பலவித கஷ்டங்களுக்கும், சோதனைகளுக்கும் பின், மனச் சாந்தியைப் பெற்ற ஒருவனின் சத்திய ஒலியாக அது இருந்தது. ஆங்கிலத்தில் கீதாஞ்சலி மொழிபெயர்க்கப்பட்டது. உலகப் பொதுமக்கள் இதற்கு நல்ல ஆதரவு கொடுத்தனர். மகரிஷியைப் புகழ்ந்தனர். "ஓமர்காயத்"தின் பின் மிகச் சிறந்த கீழைத்தேய கவி என **கீதாஞ்சலி** பெயர் வாங்கியது. இதன் பின்னர் இரவீந்திரநாத் தாகூர் வெளிநாடுகளுக்குப் பிரயாணம் செய்து விட்டு 1913ம் ஆண்டு சாந்திநிகேதனுக்குத் திரும்பினார். அந்த நூற்றாண்டின் சிறந்த கவிஞர்களுள் ஒருவரென இவர் புகழப்பட்டார்.

#### காந்தியடிகள் தொடர்பு

மகாத்மா காந்தி, எமது மகரிஷியின் வாழ்வில் 1919 ம் ஆண்டளவில் புகுந்தார். இரவீந்திரர், அரசியல் ஞானியாம் காந்தியை எவ்வளவு அன்புடன் விரும்பினாலும், அவர்கள் இருவருக்கும் பல அடிப்படை விஷயங்களில் மிகுந்த வேற்றுமை இருந்தது. காந்தியின் சத்தியாக்கிரகத்தை இரவீந்திரர் எதிர்த்தார். இதனால் பல கேடுகள் விளையுமெனவும், இளம் மக்களின் உள்ளங்களில் கிளர்ச்சி எண்ணங்களை இவை கொண்டு வரக்கூடுமெனவும் சாதித்தார். பலர் இவரது இக் கொள்கையை எதிர்த்தனர். ஆனால் கவியோ தான் எண்ணியதிலிருந்து சிறிதளவும் பிறழவில்லை.

#### விஸ்வபாரதி

உண்மையான தேசிய, சர்வதேச மனப்பான்மை என்ன என்பதை நிரூபிக்கும் முகமாக உலக கலாச்சார நிலையமான "விஸ்வ—பாரதியை" த்தாபித்தார் மகரிஷி. இரவீந்திரர் வெளிநாடு சென்று திரும்பும் போதெல்லாம் விசுவபாரதியில் பல புதிய பகுதிகள் உருவாயின. முதலில் இந்தியர்களோடு ஆரம்பித்த இக் கலைக்கூடம், சிறிது சிறிதாக உலக மக்கள் யாவரையும் தன் அன்புக் கலாச்சாரக் கைகளால் அணைத்து வரவேற்றது. இப்போது விசுவபாரதி இந்தியா முழுதுக்கும் உரிய பொதுச் சொத்தாக இந்திய அரசாங்கத்தின் மேற்பார்வையில் நடந்து வருகிறது. பண்டித ஜவாஹர்லால் அதன் அத்தியட்சராக இருந்து அதன் வளர்ச்சிக்காக பெரிதும் அக்கறை செலுத்துகிறார். விசுவபாரதியில் படித்துத் தேர்ந்த மாணவர்களில் பலர் இன்று நாட்டின் பல துறைகளில் சிறந்து விளங்குகின்றனர்.

கவியரசர் தம் மரணத்தை முன்னமே எதிர்பார்த்திருந்தார். அவர் இறப்பதற்கு ஒரு மாதத்துக்கு முன் இவ்வரிய கவிதையை இயற்றித் தம் சிரார்த்த தினத்தன்று இதனைப் பாடுமாறு பணித்திருந்தார். சாந்திநிகேதன் வாசிகளும் அவருடைய விருப்பத்தைத் தவறாமல் நிறைவேற்றினார்கள்.

**பேரமைதி யெனுங்கடலென் எதிருளதில் வோடப்**
**பிணிப்பறுத்து விட்டுவிடுன் தோழமை நான் பூண்டேன்,**
**சீர்தருநின் திருவடிக்கீழ்ப் புகலடைந்தேன் ஐயா !**
**திசை விளக்கும் வடமீனின் ஒளி அழைத்தல் காணாய்.**
**ஆர்தருநன் முத்திநெறி காட்டு பெருந் தகையே !**
**அடியேன் செய் பிழைபொறுக்கும் நின்னருளென் துணையாம்**
**பாரினிலத் தளையுமில், அகிலமெனை அணைக்கும்,**
**பயமிலை என் அகத்தில் உயர் பரம்பொருள் கண்டேன் !**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்மையில் கண்டெடுக்கப்பெற்ற...

(21 ம் பக்கத் தொடர்ச்சி)

### பொது

12. கண்டுபிடிக்கப்பெற்ற இதர பொருட்களாவன:

(i) சங்கு ஒன்று—$8\frac{1}{8}$ அங். நீளம்.

(ii) மூன்று கர்ப்பூரத் தட்டுகள், ஒன்றினது தண்டின் உயரம் 29 அங். ஏனைய இரண்டின் தண்டுகளின் உயரம் முறையே $24\frac{1}{2}$ அங்., $18\frac{1}{4}$ அங். ஆகும்.

(iii) அகப்பை ஒன்று 15 அங். நீளம்.

(iv) முக்காலிகள் மூன்று. $1\frac{5}{6}$ அங்., $1\frac{1}{2}$ அங். $1\frac{3}{8}$ அங். உயரம்.

(v) கிண்ணங்கள் இரண்டு—விட்டம் $3\frac{1}{8}$ அங்., 3 அங்குலம்.

(vi) முக்காலி மீதுள்ள கர்ப்பூரத்தட்டு—$2\frac{5}{6}$ அங். உயரம்.

(vii) முக்காலி மீதுள்ள கர்ப்பூரத்தட்டு—தட்டு காணப்படவில்லை. எஞ்சியதன் உயரம் 2 அங். எட்டு கோள்களை (இராகு கேது ஒரு கோளாகக் கருதப்படுமிடத்து) க் குறிக்கும் ஏழு இதழ்கள் உண்டு.

இக்கட்டுரை பற்றி ஸ்ரீ லங்கா ஆசிரியர் உள்ளக்கிடக்கை பின்னர் வெளிவரும்.

---

குருதேவர் இறந்துவிட்டாலும் அவரது ஆன்மா நித்தியமானது. பாரதநாடு வாயிலாக உலகினுக்குச் சேவை புரிய விரும்பிய குருதேவர் தன் இறுதி மூச்சுவரை இதையே செய்து வந்தார். அவருடைய பரிசோதனை முடிவடையவில்லை, அவரது பூதவுடல் அழிந்துவிட்டது. ஆனால் அவருடைய ஆன்மா எங்களைப் போன்று நித்தியத்துவம் பெற்றுள்ளது. இந்த முறையில் நோக்குமிடத்து எவரும் இறப்பதுமில்லை ; பிறப்பதுமில்லை. குருதேவர் இன்னமும் கம்பீரமாக வாழ்கின்றார். அகிலத்தை அணைத்து நின்றது இவரின் சுபாவம். தெய்வீகச் சார்பு பெற்ற இந்தச் சமய வழி மூலம் நித்தியத்துவம் பெற்றுவிட்டார் குருதேவர். சாந்திநிகேதனம், ஸ்ரீநிகேதனம், விஸ்வபாரதி இவை யாவும் இவர் ஆற்றிய அரும் பணியின் உருவங்கள். இவைதாம் அவருடைய சீவன்.

இதனைக் காண்பதற்காகவே தீனபந்து ஆண்ட்ருஸும், பின்னர் குருதேவரும் இவ்வுலகை விட்டுச் சென்றனர். இவரது உயிரினுக் கொப்பாகிய இந்நிலையங்களைச் செம்மையாகப் பேணுவதுதான் நாம் குருதேவுக்குச் செலுத்தும் உண்மை அஞ்சலியாகும். அவர் எங்கிருப்பினும், இவற்றையே பார்த்துக் கொண்டிருக்கிறார்.

மகாத்மா காந்தி.

---

ரவீந்திரநாதரின் இலக்கியப் படைப்புகள் அனைத்திலும் சில அம்சங்கள் மேலோங்கி நிற்கின்றன. அவை : (i) அகத்தூய்மையினாலும், அகவாழ்வைப் பக்குவப்படுத்திக்கொள்வதனாலும் முடிவாகக் கிட்டும் ஆத்மீகப் பெருமைகள் ; (ii) வெறும் மாயாவாதம் அல்லது துறவின் வியர்த்தமும் வாழ்வின் புனித அல்லது பூரண அபிவிருத்தியின் அவசியமும் ; (iii) கடையோர், கதியற்றோர் எல்லோருக்குமே அனுதாபம் காட்டும் ஓர் உடன்பாட்டு நோக்கு.

பழையன பல சிதறிப் போய்க்கொண்டும், புதியன பல பொங்கி எழுந்தும் வந்துகொண்டிருக்கின்ற இக்காலத்தில் இந்தியப் பெரியார் ஒருவர் வாழ்வின் உண்மைப் பெருமைகளை வலியுறுத்துதல் பூரிப்பிற்கு உரிய விஷயமாகும்.

சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-P... ROAD
NALLUR, JAFFNA
No.........

# அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

## தமிழில் சட்ட சம்பந்தமான நூல்கள்

| | | விலை<br>ரூ. ச. | தபாற் செலவு<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | அத்தியாயம் 60 கார்ச் சாரதிகள் சம்பந்தமான ஒழுங்குகள் ஏற்பாடு செய்வதற்கானதொரு கட்டளைச் சட்டம் .. .. | 0 10 | 0 10 |
| 2. | அத்தியாயம் 91—நொத்தாரிஸ்மார் சட்டம் .. .. | 1 30 | 0 35 |
| 3. | அதிகாரம் 95—கலியாணப் (பொதுச்) சட்டம் .. .. | 0 55 | 0 20 |
| 4. | (i) 1940 ம் ஆண்டின் 15 ம் இலக்க கலியாணப் பதிவுச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. .. .. | 0 50 | 0 10 |
| | (ii) 1944 ம் ஆண்டின் 49 ம் இலக்க ஷை .. .. | 0 50 | 0 10 |
| | (iii) 1945 ம் ஆண்டின் 20 ம் இலக்க ஷை .. .. | 0 50 | 0 10 |
| | (iv) 1946 ம் ஆண்டின் 34 ம் இலக்க ஷை .. .. | 0 50 | 0 10 |
| 5. | அத்தியாயம் 104—தத்துவப் பத்திரங்கள் சட்டம் .. | 0 20 | 0 10 |
| 6. | அத்தியாயம் 115—வீட்டுப் பணியாளர் பதிவுக் கட்டளைச் சட்டம் .. | 0 30 | 0 10 |
| 7. | அத்தியாயம் 116—தொழிற் சங்க கட்டளைச் சட்டம் .. | 0 80 | 0 20 |
| 8. | அத்தியாயம் 120—வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டம் .. | 0 40 | 0 10 |
| 9. | அத்தியாயம் 198—கிராமச் சமுதாயச் சட்டத்தின் மறுபதிப்பு .. | 1 30 | 0 35 |
| 10. | 1947 ம் ஆண்டின் 17 ம் இலக்க கிராமச் சமுதாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. .. .. | 0 10 | 0 10 |
| 11. | 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்க இலங்கையிலே முடிக்குரிய காணியின் கிரமமான பண்படுத்துதலுக்காகவும் பராதீனப் படுத்துதலுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கான சட்டம் .. | 1 05 | 0 35 |
| 12. | 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்க கல்வி அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவும் அதைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்குமான சட்டம் .. .. | 0 45 | 0 20 |
| 13. | 1939 ம் ஆண்டின் 32 ம் இலக்க பிரசவ உதவிப் பணக் கட்டளைச்சட்டம் | 0 30 | 0 20 |
| 14. | 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சம்பளச் சபைகள் சட்டம் .. | 1 10 | 0 35 |
| 15. | 1942 ம் ஆண்டின் 45 ம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் | 2 75 | 0 35 |
| 16. | 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்க ஒரு ஸ்தல அரசாங்க சேவையை அமைப்பது ஒழுங்குபடுத்துவது முதலிய ஏற்பாடுகள் செய்வதற்கான ஒரு சட்டம் .. .. .. | 0 40 | 0 10 |

**குறிப்பு.**—அரசாங்க வெளியீட்டு அலுவலக அத்தியட்சர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org